விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (07.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 170

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# பொதுக்கட்டமைப்புத் தொடர்பான புலிகளின் முடிவு இன்று வெளியாகும்!

## எரிக்சொல்ஹெய்முடனான சந்திப்பில் அறிவிக்கப்படும்

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பான விடுதலைப்புலிகளின் இறுதிமுடிபு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்முக்குமிடையில் இன்று நடைபெறவுள்ள சந்திப்பினை அடுத்து இம்முடிபு அறிவிக்கப்படவுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பினை எதிர்த்து பிக்குகள் சாகும்வரை உண்ணாவிரதம்

(கண்டி)

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜாதிகஹெல உறுமய நேற்று கண்டியில் சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் தலைமையில் கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக இப்போராட்டம்ஆரம்பிக்கப்பட்டது.

இவருக்கு ஆதரவாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதேரர் உட்பட சுமார் 5பௌத்த பிக்குகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு யோசனையினைக் கைவிடும் வரை தாங்கள் இந்த உண்ணாவிரதப்போராட்டத்தினை தொடர்ந்து நடத்தப்போவதாக உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தலைமை வகித்த ஓமல்பே சோபிததேரர் தெரிவித்தார்.

இதேவேளை பௌத்தபிக்குகள் மற்றும் இராணுவ புலனாய்வுத்துறையினரின பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டு மெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

போராட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்பாக பௌத்தமத சடங்குகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் விமானத்தளமா? விடுதலைப்புலிகள் மறுப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் சம்பூர் பகுதியில் விமானத்தளம் ஒன்றினை அமைத்துவருவதாக எழுந்துள்ள செய்தியை தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் மறுத்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்கு அத்தியாவசியப் பண்டங்கள் எடுத்துச்செல்வதை தடை செய்யும் இராணுவத்தினர் அது தொடர்பில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் எதிர்ப்பை திசைதிருப்புவதற்கே இவ்வாறான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

திருகோணமலை சம்பூரில் விடுதலைப்புலிகளால் விமானத்தளம் அமைக்கப்பட்டு வருவதாக ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. இச்செய்தி இராணுவத்தினரால் வேண்டும் என்றே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இந்தப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கான பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளன. எனவே அப்பொருளாதாரத்தடையை கண்டித்து இப்பகுதி மக்கள் தொடர்ச்சியான போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால் அப்பொருளாதாரத் தடையை நியாயப்படுத்துவதற்காக இப்போது புதிய ஒரு பொய்ப் பிரசாரத்தை இராணுவம் உருவாக்கியுள்ளது. இதன்நோக்கம் தொடர்ச்சியாக பொருளாதாரத் தடையை இங்கு வைத்திருக்க வேண்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாகுழு உறுப்பினர் சுட்டுக்கொலை

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் கருணாகுழு உறுப்பினரான கறுவல்தம்பி பாக்கியராசா (வயது 44) என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆலங்குளம் வாசியான இவரது சடலத்தை கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக் காலை பொலிஸார் மட்டக்களப்பு - பொலநறுவை வீதி ஆலங்குளம் சந்தியில் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து கண்டெடுத்துள்ளனர்.

கடந்த ஒருவருடகாலமாக வெலிகந்தைப் பிரதேசத்திலுள்ள தீவுச்சேனையில் வசித்துவந்த இவர் அண்மையில்தான் ஆலங்குளம் திரும்பியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை கறுவல் தம்பி பாக்கியராசா என்பவர் சுடப்படவில்லையென கருணாதரப்புத் தெரிவித்ததாக செய்திகள் தெரிவித்தன. (ச-4)

## கொழும்பில் திடீரென பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கொலைச்சம்பவங்களை அடுத்து கொழும்பில் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வாகனங்கள் திடீரெனநிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன் அடையாளஅட்டைப்பரிசோதனைகளும் இடம்பெறுகின்றன. முப்படைகளையும் சேர்ந்த விசேடபயிற்சி பெற்ற படையணிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசேடமாகப்பயிற்சி பெற்ற மோட்டார்சைக்கிள் படையணி ஒன்று 24மணி நேரப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான முறை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி–ஜே.வி.பி சந்திப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று நடத்தவிருந்த பேச்சுக்கள் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா தமது அமைச்சரவை சகாக்கள் மற்றும் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் நேற்று அதிகாலை தமிழ் இளைஞன் சுட்டுக்கொலை

கொழும்பு வெள்ளவத்தையில் நேற்று அதிகாலை தமிழ்இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை நெல்சன் பிளேசிலுள்ள வீடொன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

அதிகாலை 2.50 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கொல்லப்பட்டவர் கிளிநொச்சி பூநகரியைச் சேர்ந்த வீரவாகு இந்திரகுமார் (வயது 27) என அவரது தேசிய அடையாள அட்டையிலிருந்து தெரியவந்துள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரது சடலம் களுபோவில வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-2)

## பேராசிரியர் நந்தியின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவருமான செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) பூதவுடல் நேற்றுத் தீயுடன் சங்கமமானது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. பின்னர் நந்தியின் பூதவுடல் அஞ்சலிக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இவ் அஞ்சலி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ரவிராஜ், சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் வட மாகாணப் பணிப்பாளர் கேதீஸ்வரன் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், இலக்கியவாதிகள், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க, விஞ்ஞான சங்கத்தின் தலைவர்கள் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

இதனையடுத்து பூதவுடலுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆசிரியசேவை உள்ளீர்ப்பு நடைமுறைகளையும் பதவியுயர்வு ஏற்பாடுகளையும் திருத்தியமைத்தல்

## கல்வி அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி தாரா டீ மெல் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றுநிருபம்

1. 98% ஆசிரியர்களுக்கு சம்பள உயர்ச்சியையும்
2. 65% – 75% ஆசியர்களுக்கு, ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு கிடைக்கவும் வழிவகுக்கின்றது

அத்துடன் 06.10.1994 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியசேவை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட பல குறைபாடுகளையும் நீக்க வழிவகுத்துள்ளது. இவ்விடயத்தில் தமது நேரடிக் கவனத்தைச் செலுத்தி ஆசிரியர்கள் நன்மையடைய வழிவகுத்தமைக்கு அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி தாரா டீ மெல் அவர்களுக்கு சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

## இச் சுற்றுநிருபத்தினால் ஏற்படும் நன்மைகள் ஆவன

### 01) 50 வயது தடை நீக்கம்

இலங்கை ஆசிரியசேவை வகுப்பு - 1க்கு பதவி உயர்வு பெறுவதற்கு 50 வயதை அடையவேண்டும் என்று நீண்டகாலமாக இருந்துவந்த நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது.

### 02) 31.12.2004 வரை ஏனைய பதவியுயர்வு நிபந்தனைகளும் நீக்கம்

இலங்கை ஆசிரியர்சேவையில் ஒரு வகுப்பு அல்லது தரத்திலிருந்து அடுத்த தரத்திற்கு அல்லது அடுத்த வகுப்பிற்கு பதவியுயர்வு பெறுவதற்கு விதிக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகளையும் 31.12.2004 வரை முற்றாக நீக்கி பதவியுயர்வு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) 150 மணித்தியால சேவைக்காலப் பயிற்சி
2) தொழில்சார் மீளாய்வு
3) இரண்டுவருட கஷ்டப்பட்ட பாடசாலைச் சேவை
4) வினைத்திறன்காண் (E.B) பரீட்சை

### 03) புள்ளி வழங்கும் முறையில் மாற்றம்

**அ) பயிற்றப்படாத ஆசிரியசேவைக்காலம்**

அ) இரண்டு வருட சேவைக்காலத்திற்கு ஒருபுள்ளி
ஆ) இரண்டுவருடத்திற்கு ஒருபுள்ளி வீதம் வழங்கிய பின்னர் எஞ்சிய காலப்பகுதி 12 மாதங்களுக்கு மேலாயின் அவ் எஞ்சிய காலத்திற்கும் ஒரு புள்ளி

**ஆ) பட்டதாரிப் பயிலுநர்/ பட்டதாரி/ பயிற்றப்பட்ட/ டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரிய சேவைக்காலம்**

அ) ஒருவருடத்திற்கு ஒருபுள்ளி
ஆ) ஒருவருட சேவைக்காலத்திற்கு ஒருபுள்ளி வீதம் வழங்கிய பின்னர் உள்ள எஞ்சிய ஆறு மாதத்திற்கு ஒருபுள்ளி

**இ) ஒருவருட சேவைக்காலத்திற்கு இரண்டு புள்ளி**

பின்வரும் கல்வி/ தொழில்சார் தகைமை உடைய ஆசிரியர்களுக்கு 06.10.1994ம் திகதிக்கு முன்னரான காலத்திற்கு ஒருவருடத்திற்கு இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

1) விசேட சித்தி (HONOURS) பெற்ற பட்டதாரிகள்
2) கல்விமாணிப் பட்டம் பட்டதாரிகள்
3) பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம்பெற்ற ஆசிரியர்கள்
4) பயிற்றப்பட்ட பட்டதாரிகள்
5) விஞ்ஞானம், கணிதம், விவசாயம், ஆங்கிலம், கணினிக் கல்வி போன்ற ப்ாடங்களை பட்டப்பாடங்களாகக்கொண்ட பட்டதாரிகள்.

**ஈ) கல்வி தொழில்சார் தகைமைப் புள்ளிகள்**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்திற்கு ஒருபுள்ளி

### 04) பதவியுயர்வு வழங்கும்முறை

அ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு - III - தரம் 2
06.10.1994 ஆம் திகதிக்கு முன்னரான பயிலுநர் காலம் யாவும் பயிற்றப்படாத ஆசிரியர்சேவைக்காலமாகக் கருதி, ஆசிரியசேவை வகுப்பு III - தரம் 2 இற்கு உள்வாங்கல்.

ஆ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு III - தரம் 1
அ) பயிற்றப்படாத சேவைக்காலத்தில் ஐந்து புள்ளிகள் அல்லது
ஆ) பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் நடைமுறைப்படும் திகதியிலிருந்து அல்லது
இ) பட்டச்சான்றிதழ் நடைமுறைப்படும் திகதியிலிருந்து

இ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு II - தரம் 2
அ) சேவைக்காலம் முழுவதும் 10 புள்ளிகள் அல்லது
ஆ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு III -1இல் ஐந்து புள்ளிகள் அல்லது
இ) பட்டதாரி டிப்ளோமாப் பட்டம்பெற்ற திகதி அல்லது
ஈ) பட்டதாரி முதுமாணிப்பட்டம் (M.A) பெற்ற திகதி அல்லது
உ) பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டம்பெற்ற திகதி

ஈ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு II - தரம் 1
அ) சேவைக்காலம் முழுவதும் 15 புள்ளிகள் அல்லது
ஆ) இலங்கை ஆசிரியர் வகுப்பு II - தரம் 2இல் பத்துப் புள்ளிகளை நிறைவுசெய்தவர்கள்

உ) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு I
1) சேவைக்காலம் முழுவதும் 20 புள்ளிகள் அல்லது
2) இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு II - தரம் 1 இல் ஐந்து புள்ளிகளை நிறைவுசெய்தவர்கள்

### 05) நிலுவைகள் இல்லை

பதவி உயர்வுகள் புள்ளிகளின் அடிப்படையில் வழங்கினாலும், அதற்கான சம்பள நிலுவைகள் 31.12.2004 வரை வழங்கப்படமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை வருந்தத்தக்கதும், கண்டிக்கப்படவேண்டியதுமாகும். நிலுவைகள் 01.01.2005 இலிருந்து வழங்கப்படும்.

### 06) டிப்ளோமாதாரிகளுக்கு நன்மைகள்

அ) இரண்டுவருட விவசாய மனையியல் டிப்ளோமா பட்டம்பெற்ற டிப்ளோமா தாரிகள்
ஆ) மூன்றுவருட கால சங்கீதம், நடனம், சித்திரம் டிப்ளோமா பட்டம்பெற்ற டிப்ளோமாதாரிகள் அத்திகதியிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகக் கருதப்பட்டு உள்வாங்கப்படுவார்கள்.

### 07) 06.10.1994 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம்பெறாத பட்டதாரிகள்

மேற்படி பட்டதாரிகள் அத்திகதியில் 45 வயது அல்லது அதற்குக் கூடிய வயதை அடைந்திருப்பின் அவர்கள் தொழில்தகைமையுடைய பட்டதாரிகளாகக் கருதப்பட்டு இலங்கை ஆசிரியர்சேவையில் உள்வாங்கப்படுவர்.

இதனை மறுபக்கமாகச் சொல்வதாயின் 06.10.1994 இல் 45 வயதிற்குக் குறைந்த ஆசிரியர்களும் 06.10.1994ம் திகதிக்குப் பின்னர் நியமனம்பெற்ற பட்டதாரிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறாமல் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு II - தரம் 1 இற்கு அல்லது இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு I இற்கு எதிர்காலத்தில் எவ்வளவு புள்ளிகள் பெற்றாலும் பதவியுயர்வுபெறமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்சொல்லப்பட்ட சலுகைகள் 31.12.2004 வரை மட்டுமே. எதிர்காலத்தில் இவ்வாறான பதவியுயர்வுகள் பந்தி 3 இல் குறிப்பட்டுள்ள சகல நிபந்தனைகளையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மகாசிவம்**

**பொதுச்செயலாளர், தமிழர் ஆசிரியர் சங்கம்**

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

❖❖❖❖❖

ஆனைக்கோட்டை வண். வடமேற்கு ஸ்ரீகண்ணகை அம்பாள்கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

❖❖❖❖❖

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

❖❖❖❖❖

புங்குடுதீவு மேற்கு பிள்ளையார் கோவில் தேர் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

(அ-2)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலக்கிய நண்பர்கள் நடாத்தும் எஸ்.பி. கிருஷ்ணனின் 'இனி வசந்தகாலம்' எனும் சிறுகதைநூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(அ-5)

## மாமனிதர் சிவராமை கொன்றவர்களை பொலிஸார் இனங்கண்டுள்ளனராம்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமைக் கொலைசெய்தவர்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுக்குச் சார்பான அரசியல் கட்சியொன்றே சிவராமைக் கொலைசெய்துள்ளது என்றும், இக்கொலையுடன் அமைச்சரவையில் அங்கம்வகிக்கும் இன்னொரு அரசியல்கட்சிக்கும் தொடர்பு என்றும் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருவதாகவும்,

ஆனால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் கைதுசெய்யும் வரை பொலிஸார் அவ்விடயத்தை இரகசியமாக வைத்துள்ளனர்.

அத்துடன் விசாரணைகளைப் பொலிஸார் இரகசியமாக மேற்கொண்டுவருவதாகவும் அவ் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலையாளிகள் விட்டுச்சென்ற ஒரு தடயமே இக்கொலை தொடர்பான சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கு பாரியளவில் பொலிஸாருக்கு உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

## பரு. ஆதார வைத்தியசாலைக்கு அரச அதிபர் விஜயம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர தேவைகளைக் கண்டறிவதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். அரசாங்க அதிபர் விஜயம் செய்யவுள்ளதாக அறியப்படுகிறது. குடாநாட்டு மக்களின் முக்கிய வைத்தியசாலைகளில் ஒன்றான மேற்படி வைத்தியசாலையில் நிலவிவரும் வைத்தியர்கள் பற்றாக் குறையும், மற்றும்பல வளப்பற்றாக்குறையும் அரச அதிபர் விஜயத்தால் பெருமளவு நிவர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(து-101)

## நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேசசபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இன்று செவ்வாய்கிழமை காலை 9.00- 11.00 பொதுநூலகம் வட்டாரம் - 2, 10.30 - 11.30 ஐக்கிய தீபம் சனசமூக நிலையம் வட்டாரம் - 1, 12.00 - 1.00 நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம், 1.30- - 2.30 வளர்மதி சனசமூக நிலையம் வட்டாரம் -2 இலும்,

நாளை புதன்கிழமை காலை 9.00 - 11.00 பாலமுருகன் முன்பள்ளி வட்டாரம்- 4, 10.30 - 11.30 சாரைப்பிட்டி பொதுக் கிணற்றடி வட்டாரம் - 5, 12.00 - 1.00 சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையம் வட்டாரம் - 6, 1.30 - 2.30 பிரதேசசபை அலுவலகம் வட்டாரம் - 10 இலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

# பாடசாலை மாணவர் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கம்

## -நூல்வெளியீட்டு விழாவில் ஆறுதிருமுருகன்

(இணுவில்)

இணுவில் ஆசிரியர் சோ. பரமசாமியின் " வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி'' நாடகங்கள் நூல்வெளியீட்டு விழா இணுவில் அறிவாலயத்தில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது.

இந் நிகழ்வில், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் உரையாற்றுகையில்,

மாணவர்கள் பயன்படுத்துவதற்கு இன்று பல அறிவு சார் நூல்கள் இருக்கின்றன. ஆனால அதனைப் பெரியவர்கள் முதல் மாணவர்கள் வரை பயன்படுத்துவதில்லை.

இந்நிலையை மாற்றுவதில் பெற்றோர்களே முக்கிய கவனமெடுத்தல் வேண்டும் என்றார்.

தொடர்ந்து இடம்பெற்ற விழாவில வரவேறபுரையினை ச.வே.பஞ்சாட்சரமும், வாழ்த்துரையினை சிவசரவணபவனும்,தலைமையுரையினை ஆசிரியமணி அ.பஞ் சாட்சரமும, வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக் கழக சித்த மருத்து வத்துறை விரிவுரையாளர் கலாநிதி பொன் இராமநாதனும் வழங்கினர். தொடர்ந்து நூல் முதல் பிரதியினை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி க.தேவராசா மற்றும் இணைபபிரதியினை யாழ்.மக்கள் வங்கி வடபிராந்திய உதவி முகாமையாளர் அ.குகதாசன் வழங்கியதுடன், ஆய்வுரையினை இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் மங்கையற்கரசி திருச்சிற்றம்பலமும், நயப்புரையை சைவப்புலவர் சு.செல்லத்துரையும் வழங்கினர்.

(ர-122)


# தமிழை விட சமஸ்கிருதம் உயர்வா ?

## எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு விழாவில் எதிர்ப்பு

(கோவை)

கோவை விஜயா பதிப்பகம் சார்பல் ஞானபட விருது பெற்ற எழுந்தாளர் த.ஜெயகாந்தனுக்கு கடந்த ஞாயிறறுக்கிழமை நடந்த பாராட்டு விழாவில் தகராறு ஏறபட்டது.

ஜெயகாந்தன், சமஸ்கிருதத்திலதான் பேச வேண்டும் என்று வற்புறுத்தி சட்டக்கல்லூரி மாணவர்களும் திராவிடக் கழகத்தினரும் தகராறில் ஈடுபட்டனர். சிலர் மேடை முன்பு நின்று அவரை தகாத வார்த்தைகளால் திட்டவும் செய்தனர்.



பொலிஸார் வந்தது அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆதலால் அவர்கள் அரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஞானபீட விருது பெற்ற ஜெயகாந்தனுக்கு அண்மையில் சென்னையில் சமஸ்கிருத சங்கத்தில் பாராட்டு விழா நடந்தது. அதில் அவர், தமிழைவிட சமஸ்கிருதம் உயர்வானது என்று பேசியதாகவும், தமிழர்களை தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சனம செய்ததாகவும் கண்டித்து, சட்டக்கல்லூரி மாணவர்களும் திராவிட கழகத்தினரும் தகராறில் ஈடுபட்டனர்.

இத் தகராறுக்கு ஜெயகாந்தன் உரையாற்றுகையில்,

இவர்களின் கோபத்தில் இருந்து உணமையை அறிகிறேன. தவறுகள் தெரிந்து நடப்பதில்லை. என்னை மன்னிக்கவும், சமஸ்கிருதம் உயர்வானது என்ற நோக்கத்தில் சொல்லவில்லை, தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள், நான் கூறியதற்கு என்ன அர்த்தம் என்று என்னைப் புரிந்து கொண்டவர்களுக்குத் தெரியும்.

தமிழின் இனிமை வேறு எந்த மொழயிலும் இல்லை. மனித குலம் எங்கே தவறு செய்தாலும் மனம் புண்புட வேண்டும். அதனால்தான் மனிதனுக்கு ஜீவாத்மா என்று பெயர் வந்தது. மற்ற உயிரினங்களுக்கு ஜீவன் என்று மட்டுமே பெயர். சகல அவஸ்தைகளும் உயிரிணங்களுக்கு உண்டு. ஆனால் அவைகளால் உணரமுடியாது. தன்னைத தானே அது நேசித்து கொள்ளும். மனிதன் மட்டுமே உணரும் பண்பும் நேசிக்கும் தன்மையும உடையவன்.

தமிழில் எனக்கு அதிகப் பற்று உண்டு. மனித உடலுக்கும், உயிருக்கும் உறவு உண்டு. உலகத்தையே தமிழ் இணைக்கிறது. மனித வாழ்வு நாகாகம் உயர்ந்து கொண்டே போகிறது. அதனுடன்சேர்ந்து தமிழும வளரும்

பொருள் இல்லாததைப் பொருள் ஆக்குவதே தமிழ். சுயமரியாதை உடையவர்கள் பிறருடைய மரியாதையையும் தெரிந்திருக்க வேண்டும். தமிழனுடைய தமிழ்ப் பற்று மெய்யாக இருக்க வேண்டும்.

புகழ்ச்சியை ஏற்றுக் கொள்வதைப் போல இகழ்ச்சியையும் எதிர் கொளள வேண்டும். என்னை இழிவு படுத்தி எனது சிந்தனையை வலுப் படுத்துகிறார்கள். தமிழுக்காகத் தொண்டு செய்ய வருபவர்களை தமிழர்களே பகைத்துக் கொள்கின்றனர்.

தமழ்நாட்டைச் சேர்ந்த தமிழன் என்று சொல்வதைவிட, இந்தியாவைச் சேர்ந்த தமிழன் என்று சொல்வதையே பெருமையாக நினைக்கிறேன்.

சரியான தருணத்தில் தமிழை செம்மொழியாக அறிவித்துள்ளார்கள், இதனால் தமிழ் உயர்ந்து நிற்கிறது. தமிழை வளர்க்க, ஆங்கில எழுத்துக்களைத் தார்பூசி அழிப்பது முறையற்ற செயல், இந்த செயலால் தமிழ் வளராது.

எதிர்த்துவிட்டு, பதவிக்காக மண்டியிடுபவன் நான் இல்லை, சமஸ கிருதம், இந்தி ஆகிய மொழிகளை உயர்வாகப் பேசி, அங்குள்ள மக்கள மனதில் இடம் பிடித்து, அங்கு தமிழைப் பரப்புவேன் என்றார். (ர)

# அதிசய நீர்மூழ்கிக் கப்பல்

(வாஷிங்டன்)

நவீன போர் விமானங்களையும், ஏவுகணைகளையும் குவித்து வைத்துள்ள அமெரிக்க இராணுவம் இப்போது போர் முனையில் எதிரிகளை உளவு பார்க்க ரோபாட்டுகளை பயன்படுத்தி வருகிறது. ஆள் இல்லாத விமானங்களில் இந்த ரோபாட்டுகளை அனுப்பி கண்காணிப்பு நடத்துகிறது.

இப்போது ஆழ்கடலுக்கு அடியில் சென்று எதிர் நாட்டுக் கப்பல்களை தகர்க்கவும் குட்டி நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்கா தயாரித்து வருகிறது. இந்த நவீன நீர்மூழ்கி கபபல்கள் ரோபாடடால் இயக்கப்படுகின்றன.

கடலுக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை இந்த ரோபாட் நீர்மூழ்கிக்கப்பல் கண்டு பிடித்து அகற்றும். எதிரிகளின் நீர்மூழ்கி கப்பல்களை நீண்ட தூரத்தில் இருந்தே கண்டுபிடித்து அவற்றை இது தகர்த்து விடும்.

ஆனால், இந்த குட்டி நீர்மூழ்கிக் கப்பல்களை எதிரி நாட்டு கப்பல்களால் அடையாளம் காணமுடியாது. 21அங்குலம் அகலம் மட்டுமே இருக்கும். இதுபோன்ற 4 நவீன நீர்மூழ்கிக்கப்பல்கள் முதல் கட்டமாக தயாரிக்கப்பட்டுள்ளன. (ற)

# அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டலிசா றைஸ் உததியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்த வேண்டுகோளை ஏற்றே அவர் இலங்கைக்கு விஜம் செய்யவுள்ளார்.

அவரது இலங்கை விஜயம் குறித்து அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் அரசிற்கு அறிவத்துள்ளது. எனினும் அவரது விஜயம் குறித்த நாள எதுவும அறிவிக்கவில்லை. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரை கடந்த வெள்ளிக்கிழமை கொண்டலிசாறைஸ் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# யாழ்.செயலகத்தில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் யாழ். செயலகததில் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் நாளை 9.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

முன்னர் நடத்தப்பட்ட நேர்முகப பரீட்கைக்குக் கலந்து கொள்ளத் தவறிய அனைத்து விண்ணப்பதாரிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (அ-9)

# சுனாமி நிவாரணப் பருப்பு ப. நோ. கூ. சங்கத்தில்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் முகமாக விநியோகத்திற்கு வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 500 கிலோகிராம் எடை கொண்ட பருப்பு றம்புக்கனை பலநோக்கு கூட்டுவுச்சங்கத்தில் இருந்த சமயம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

4 இலட்சம் ரூபா பெறுமதியுள்ள 2 ஆயிரம் கிலோ கிராம் பருப்பு ஏற்கனவே விற்கப்பட்டுள்ளது என்று றம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பருப்பு பாவனைக்கு உகந்ததில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## சிறிஜெயவர்த்தனபுர

# பல்கலைக்கழக விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்கு

(கொழும்பு)

சிறிஜெவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பிரதித் துணைவேந்தர் ஆகியோர் தமது பதவிகளிலிருந்து விலகும் முடிவைத் தற்காலிகமாக மாற்றும் படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியா எவ்.எவ்.ரத்நாயக்க தகவல் தெரிவிக்கையில், இந்த விவகாரம் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கப்படும் என்று தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிறிஜெயவர்த தனபுர பல்கலைக்கழக மன்றம் ஆகியன நடத்திய கலந்துரையாடலின் போது இது தெரியவந்துள்ளது. (அ-9)

# 28 ஆயிரம் ஐ. தே. கட்சியினர் அரசியல் பழிவாங்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த 28 ஆயிரம் பேர் அரசியல் பழிவாங்கலுக்கு இலக்காகி இருப்பதாக கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துளளார்.

அவ்வாறான ஊழியர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்கால ஆட்சியின் போது பாதுகாக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

தமது கட்சிக்காக உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (அ-9)

# இராசி பலன்

**07.06.2005**
**(வைகாசி 24, செவ்வாய்க்கிழமை)**
**பிரதமை பின்னிரவு 4.44 மணிவரை**
**மிருகசீரிடம் முழுவதும்**
**இராகுகாலம் 2.52- 4.22 மணிவரை**
**சுபநேரம் 10.22 -11.52 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, சுவாரஸ்யம், உடல்நலம். |
| இடபம் | தனவிரயம், கடினவார்த்தை, கௌரவக் குறைவு, வேலைச்சுமை. |
| மிதுனம் | பெரியோர் ஆதரவு, தேகநலன், சயன சுகம், காரிய சிந்தை. |
| கடகம் | பிரயாண அலைச்சல், சுபசெலவு, வேலைச் சுமை, உறவினர் மனஸ்தாபம். |
| சிங்கம் | இஷ்டசித்தி, நண்பர்கள் உதவி, விருந்து பசாரம், பெருமையடைதல். |
| கன்னி | உற்சாகம், நிலைமாற்றம், புதிய தகவல், தொழில் நன்மை. |
| துலாம் | பித்தரோகம், சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | உறவினர் வெறுப்பு, ஆரோக்கியக்குறைவு, முயற்சி தடங்கல், பிரயாணபயம். |
| தனுசு | செல்வாக்கு, குடும்பமகிழ்ச்சி, தொழில் நன்மை, நல்ல முயற்சி. |
| மகரம் | சத்துருஜெயம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசன நன்மை, உடல் நலம். |
| கும்பம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, தெய்வ சிந்தை, போசனசுகக் குறைவு. |
| மீனம் | ரோக நிலை, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், சுப செலவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

-வளவன்

# பெற்ற குழந்தைகளைக் கொன்று பிரிட்ஜில் வைத்திருந்த தாய்

(வியட்னாம்)

ஆஸ்திரியா நாட்டில் ஒரு வீட்டிலிருந்து 3 சிசுக்களின் சடலங்களை பொலிஸார் கைப்பற்றினர். குழந்தைகளைக் கொன்றதாக ஒப்புக்கொண்ட பெண் கைது செய்யப்பட்டார்.

வட்டில் இருந்த பிரிட்ஜில் ஐஸ் தயாரிக்கும் அறையில் இரு சிசுக்களின் சடலங்கள் இருந்தன. மறறொன்று முழுவதும் சிமெண்ட் நிரப்பப்பட்ட பெட்டியில் வைக்கப் பட்டிருந்தது.

இது குறித்து பொலிஸ் அதிகாரி ஹெரால்ட் கட்ஷி கூறியது,

கிரேஸ் நகரில் உள்ள வீட்டில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சிசுக்களின் சடலங்கள் கடந்த திங்கட் கிழமை அகறறப்பட்டன. இறந்து ஒரு வருடமாக பிரிடஜில் அவை இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அந்தக் குழந்தைகள் அனைத்தும் கடந்த 3 ஆண்டுகளில் பிறந்தவையாக இருக்கலாம்.

அக் குழந்தைகளின் தாய் என கூறிக்கொள்ளும் 32 வயதான பெண்ணும், தந்தை என்று கருதப் படும் 30 வயதான ஒரு நபரும் கைது செய்யப்பட்டனர். குழந்தைகள் எப்படி கொலை செய்யப்பட்டனர் என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது. தான் தீவிரமான மனப்பதற்றத்தில் இருப்பதாக பொலிஸ் வசாரணையில் அந்த பெண் தெரிவித்தார்.

கைதான நபரோ அந்த பெண் இதுவரை கருத்தரித்ததாகவே தெரியவில்லை என்று கூறியுள்ளார் என்றார். (ற)

# நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதி

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை பிரதான வீதியிலிருந்து திக்கிராய்க் குளத்திற்குப் பிரிந்து செல்லும் வயல் வெளி வீதி கடந்த 35 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாதுள்ளது.

இதனால், இவ் வீதியால் போக்குவரத்துச் செய்யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-49)

**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

* **மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி**
* **சித்திரப் போட்டி**
* **புகைப்படப் போட்டி**
* **சிறுகதைப் போட்டி**

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்**

**விபரம் மிகவிரைவில் உ**

## இன்று ஒரு தகவல்

# ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன் தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய அப்பா கடைசியாக அவர்களுக்கென்று விட்டுவிட்டுப்போன சொத்து ஒரே ஒரு மாமரம்,ஒரே ஒரு பசு மாடு,ஒரே ஒரு போர்வை அவ்வளவுதான்.

இந்த மூன்றையும் அவர்கள் இரண்டுபேரும் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாகப் பிரிவினை எப்படி பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாவற்றையும் சரி பாதியாக வெட்டி ஆளுக்குப் பாதியாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன் ஒரு மக்கு.என்ன சொன்னாலும் தலையாட்டுபவன். தம்பி கொஞ்சம் புத்திசாலி. இருந்தாலும் அந்த புத்திசாலித்தனத்தைத் தவறாக உபயோகப்படுத்தக் கூடியவன்.

அந்தத் தம்பி அண்ணனிடம் சொன்னான். " அண்ணா நமது அப்பா நமக்காக விட்டு விட்டுப் போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ளலாம். ஊரைக் கூட்டி பஞ்சாயத்து வைக்க வேண்டிய அவசியமே இல்லை" என்றான். "சரி தம்பி... அப்படியென்றால் நீயே அதை பங்கு போடு" என்றான் அவன். தம்பி யோசித்தான். அதன் பின் சொன்னான்.

"அண்ணாச்சி நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் அந்த மூன்று விடயத்திலும் உங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப் பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தில் பாதிக்குக் கீழே உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு! மேல்ப்பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும்.

அடுத்ததாக உள்ளது அந்தப் பசுமாடு! எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப் பகுதி உங்களுக்கு...பின் பக்கம் எனக்கு இருந்துவிட்டுப் போகட்டும். அடுத்தது அந்தப் போர்வை அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி. விபரம் புரியாமல் 'சரி' என்று ஒத்துக் கொண்டான் அண்ணன்.

அதன்பின் என்ன நடந்தது தெரியுமா? அண்ணன் அந்த மரத்திற்கு உரம் வைக்கிறான். தண்ணீர் ஊற்றுகிறான். தம்பி சந்தோஷமாக மேலே உள்ள பழங்களைப் பறித்துச் சாப்பிட்டான். அண்ணன் பசு மாட்டுக்கு புல்வைக்கிறான். தண்ணீர் வைக்கிறான். தம்பி அவன் பாட்டுக்கு பால் கறந்து தேநீர் போட்டுக் குடித்துக் கொண்டிருந்தான். அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான். தம்பிக்காரன் இரவில் அதை வாங்கி போர்த்திக் கொண்டு உறங்கினான். இப்படியே நடந்து கொண்டிருந்தது.

இதைப் பக்கத்து வீட்டுக்காரன் ஒருநாள் கவனித்தான். இங்கு நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான். உடனே அந்த அண்ணன்காரனை இரகசியமாக ஒரு நாள் தன் வீட்டுக்கு அழைத்து வந்து சில போதனையெல்லாம் செய்தான். அவனும் சரியென்று தலையாட்டி விட்டுப் போனான். அதன்பின் என்ன நடந்தது தெரியுமா? அண்ணன் மரத்திற்கு உரம் வைப்பது தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். ஒரு கோடரியை எடுத்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான் அண்ணன். தம்பி பதறிப் போய் "என்ன அண்ணா இப்படிச் செய்கிறீர்கள்? என்றான். என் பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்றான் அவன்.

மாட்டுக்குத் தீனி வைப்பதையும், தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பி பால் கறந்து தேநீர் போட முடியவில்லை தவித்துப் போய் விட்டான்.

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதைத் தண்ணீர் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக்கொள்ள முடியவில்லை. அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி.

ஒற்றுமையாக வாழ்வதிலும் ஒரு ஒழுங்குமுறை வேண்டும் என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா?

ஒரு ஆள் சொன்னான். " என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என் கூடப் பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பி என்றே கூப்பிடுவேன். அதுதான் இப்போது தப்பாகிவிட்டது" என்றான். "ஏன்" என்று கேட்டேன்.


" அவனும் அதை நிஜம் என்றே நினைத்துக்கொண்டு இப்போது என் சொத்தில் பாதிப் பங்கு கேட்கிறான் சார்" என்றான் மிகவும் வேதனையோடு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இராணுவத்தினரின் வைத்தியசேவை







(யாழ்ப்பாணம்)

55ஆவது சேனையகத்தின் கீழ் 554ஆவது கட்டளையிடும் பிரதேசத்தின் கீழ் உள்ள 14ஆவது காலாட் படையின் அருகில் உள்ள உசன், தவசிக்குளம், கெற்பேலி, பலாலி மிரியன்காடு மற்றும் விடத்தல்பளை ஆகிய கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 9 கிராமங்களில் 1500குடும்பங்களுக்கும் 551ஆவது கட்டளைப் பிரதேசத்தின் கீழ் உள்ள 9ஆவது காலாட்படைப்பிரிவின் அருகில் உள்ள பொற்பதி; குடத்தனை, நடுக்குடத்தனை ஆகிய கிராமங்களில் வாழும் 500 குடும்பங்களுக்கும் கடந்த சனிக்கிழமை காலையில் இருந்து இராணுவ வைத்தியர்களினால் வைத்திய பரிசோதனைசேவை நடாத்தப்பட்டது.

554ஆவது கட்டளையிடும் பிரதேசத்தில் உள்ள கெற்பேலி ஆரம்ப பாடசாலையில் கிராம மக்கள் 150 பேரளவிலும், 551ஆவது கட்டளையிடும் பிரதேசத்தில் பொற்பதி றோமன் கத்தோலிக்க பள்ளியில் கிராம மக்கள் 350பேர்வரையும் இவ் வைத்தியசேவையினால் பயன் அடைந்தனர்.

இராணுவத் தலைமை வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் அடங்கிய 11 பேரில் உடல் நோய் சம்பந்தமான வைத்திய நிபுணர் கேணல் திருமதி எக்கே ஆரியரத்ன சிறுவர்களுக்கான நோய்களின் வைத்தியநிபுணர் லெப்டினன் கேணல் திருமதி எம்ஜீஜீ மந்திர ரத்ன உட்பட பல உயர்அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக மேற்படி கிராம வாசிகளில் அதிகமானோர் ஏழைகள் என்பதால் நகருக்குச்சென்று வைத்தியசாலைகளில் தேவையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வாகன வசதிகள் இல்லாததனால் சிறு குழந்தைகளில் அதிகமானோருக்கு வாய்நோய், தோல்நோய், சளி, நுரையீரல் நோய், பூச்சி நோய், ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சரியான விற்றமின்கள் கிடைக்காத காரணத்தினால், மிகவும் துன்பத்திற்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

55ஆவது சேனையக சேனாதிபதி மேஜர் ஜெனரல் வீ.ஆர்.சில்வாவிற்கு இந்நிலை தெரிய வந்ததும். இந்நிலை பற்றி யாழ்.பாதுகாப்பு தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப இராணுவ வைத்திய சேவைப் பணிப்பாளர் கேணல் எஸ்.எச்.முணசிங்கவினால் இந்த வைத்திய சேவைக்கான வைத்திய குழுவினர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வைத்திய பரிசோதனை சேவையில் பூச்சி நோய் மருந்தும், நீரிழிவுக்கான மருந்து, பிரசருக்கான மருந்துகள், விற்றமின்களுடன், இராணுவ சேவை பெண்கள் பிரிவினரினால் வழங்கப்பட்ட சிறு குழந்தைகளுக்கான, உணவு பாலீமாக்கள், அதற்கான உபகரணங்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள், வேறு பொருட்கள் ஆகியன இக்கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வைத்திய சேவைக்கான வாகன வசதிகளை இராணுவத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். இதுபோன்ற வைத்திய சேவைகள் 6 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக வைத்திய குழுக்களின் உயர் அதிகாரி கூறினார். இச் சேவைக்கு கிராம மக்கள் மனப்பூர்வ நன்றியை இராணுவத்தினருக்கு தெரிவித்துக்கொண்டனர் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஒவ்வொரு 32 மணித்தியாலத்திற்கும் மேல்மாகாணத்தில் ஒவ்வொரு கொலை

மேல் மாகாணத்தில் ஒவ்வொரு 32 மணித்தியாலத்திற்கும் ஒரு கொலைச் சம்பவம் இடம்பெறுவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களில் 46வீதமானவை மேல் மாகாணத்தில் இடம்பெறுவதாக குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர், இம் மாகாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பொலிஸ்மா அதிபர், இது தொடர்பாகக் கிடைக்கும் தகவல்களில் 28 வீதமானவை போலியானவை எனவும் சுட்டிக்காட்டினார்.

வசாரணைகளின் போது சாட்சியாளர்கள் சாட்சியமளிக்க சமுகமளிக்காததால் பெரும் எண்ணிக்கையிலான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ற-9)

# ஆங்கிலக் கல்வியின் தரத்தை மேம்படுத்த கல்வியமைச்சினால் விசேடதிட்டம் ஆரம்பம்

அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியின் தரத்தை மேம்படுத்த கல்வியமைச்சு பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

30 பயிற்சி நிலையங்களில் 30ஆயிரம் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கள் இத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆங்கிலக் கல்வி போதனாத் திட்டம் இதனை மேற்கொண்டுள்ளது. பேராதனை ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையின் நிர்வாகத்தின் கீழ் இந்தத் திட்டம் செயற்படும்.

கல்வி வலய மட்டத்தில் ஆங்கிலக் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்பார்த்துள்ளார்.

அங்கீகாரம் கிடைத்ததும் ஒவ்வொரு மாகாணத்திலும் அடுத்த வருடம் வலய மட்டத்தில் இத்தகைய ஆங்கிலக்கல்வி நிலையங்கள் அமைக்கப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ற-9)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மட அரசடி வீதியிலுள்ள செல்வ நாகபூசணி அம்பாள் ஆலய ஆனி மஹோற்சவம் நாளை புதன்கிழமை 9.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 22ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் கப்பல் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ற-5)

## மயான வீதியை திருத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஏழாலை மத்தியில் உள்ள மயானத்திற்குச் செல்லும் வீதியினைத் திருத்தித் தருமாறு இப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறிப்பாக இவ் வீதியினை விவசாயிகள் பலர் பயன்படுத்தி வருகின்றனர். இவ் வீதியில் பெரியளவிலான குன்று குழிகள் உள்ளதால் சந்தைக்குச் செல்லும் விவசாயிகள் பெரிதும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மற்றும் மழைக்காலங்களில் இவ் வீதியில் பயணம் மேற்கொள்ள முடியாது எனவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ் வீதியில் இந்து கிறிஸ்தவ மயானங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-122)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

11 மூலஸ்தானம் வரை சென்று ஏகாம்பரநாதப் பெருமானை வழிபட்ட திருப்தியோடு ஆலயத்தை விட்டு வெளியேறினாலும், மனதிற்குள் ஏதோவொரு குறை இருக்கவே செய்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் 'அரோஹரா' என்ற உச்சாடனத்தோடு ஆண்டவனை வழிபடும் முறையை தமிழகத்தில் காணமுடியாமல் போனமையே மனக்குறைக்கான காரணமாகும்.

## கலை அம்சமே முதன்மை பெறுகின்றது

நீண்ட வரிசையில் நின்று மூலஸ்தானத்திற்குச் சென்றாலும் பக்தி பூர்வமாக மூல மூர்த்தியை வழிபடும் பாங்கைத் தமிழகத்தில் காணமுடியவில்லை.

ஏதோ இரண்டு கைகளையும் சேர்த்து நெஞ்சோடு வைத்திருக்கிறார்களே தவிர பக்தி உணர்வோடு, உச்சிமேல் கரம் குவித்து வழிபடும் பக்குவ நிலையை அடியவர்களிலன்றி, திருமுறைகளில் மட்டுமே காணமுடிந்தது.

சென்னை மாநகரின் புறநகர்ப்பகுதிகளிலுள்ள ஆலயங்களை மட்டும் வைத்துக் கொண்டு வழிபடும் முறையை தமிழகத்தில் அமைந்துள்ள அனைத்து ஆலயங்களுக்கும் பொதுமைப்படுத்துவது, ஆய்வுக்கு அழகல்ல என்றாலும், தமிழகத்திலுள்ள ஆலயங்களில் இருக்கக் கூடிய தெய்வ விக்கிரகங்கள் தெய்வீகத்துடன் நோக்கப்படுவதை விட கலைத்துவ நோக்கில் இரசிக்கப்படுகின்றதெனக் கூறுவதே பொருத்தமுடையதாகும்.

அதாவது, ஆலயங்களுக்குச் செல்லும் இந்திய நாட்டவர்கள் அங்குள்ள கலைத்துவ அம்சம் பொருந்திய சிலைகளை இரசிப்பதையே முதன்மைப்படுத்துகின்றார்கள்.

இவர்களோடு ஒப்பிடுகையில் ஈழத்தின் சைவத் தமிழர்கள் வித்தியாசமானவர்கள் என்றே சொல்லவேண்டும். இவர்கள் ஆலயங்களிலுள்ள சிலைகளை தெய்வீக உணர்வோடு நோக்குகின்றார்கள்.

இதனால் கரங்கள் உச்சி மேல் குவிய, கண்கள் அருவி சொரிய, அரோஹரா என்ற உச்சரிப்போடு, தெய்வீகத்தை உள்வாங்குகின்றனர்.

இந்த இருவேறுபட்ட எண்ணப்பாடுகளுக்கான காரணங்கள் பலவாறாக இருக்கலாம்.

## கற்பூரதீபம் காட்டப்படுவதில்லை

தமிழகத்து ஆலய வழிபாட்டு முறையில் எம்மை அதிர்ச்சிக்கு ஆளாக்கிய விடயங்கள் பலவாறாக இருப்பினும், அதில் முதன்மையானது தீபாராதனையாகும்.

இங்கு இறைவனுக்கு கற்பூர தீபம் காட்டப்படுவதில்லை. மாறாக, நெய்த் தீபம் மட்டுமே காட்டப்படும். சுட்டியில் விடப்பட்ட நெய்யில் திரிவைத்து எரிக்கப்பட்ட தீபத்தை சுவாமிக்குக் காட்டுவது தெய்வீக உணர்வை ஏற்படுத்துவதில் தோல்வி கண்டுவிடுகின்றதென்றே கூறவேண்டும்.

இது கூட தமிழகத்து மக்களின் தெய்வீக உணர்வைக் குறைத்துவிட்டதெனக் கூறலாம். இந்த முடிவு யாழ்ப்பாணத்துக் கோவில்களில் பஞ்சாலாத்தி காட்டப்படும் போது நம் உள்ளத்தில் ஏற்படும் தெய்வீக உணர்வின் அடிப்படையிலிருந்து மட்டுமே கூறப்படுகின்றது.

## உலகளந்த பெருமாள்

ஏகாம்பரநாதர் கோவிலை விட்டு நாம் வெளியேறவும், உச்சியில் நின்று உஷ்ணத்தைக் கக்கி நின்ற கதிரவன் களைத்தவன் போல் மேற்கு நோக்கி அசையவும் சரியாக இருந்தது.

ஏகாம்பரநாதர் கோவிலில் இருந்து உலகளந்த பெருமாள் கோவிலுக்கு ஆட்டோவில் செல்வதாக இருந்தாலும், காஞ்சிபுரத்தில் ஆட்டோவுக்குப் போட்டியாக குதிரை வண்டிகளும் ஓடிக்கொண்டிருந்ததால், குதிரை வண்டியில் செல்வதென்றே முடிவு செய்தோம்.

சேர் பொன் இராமநாதனின் பரம்பரையில் வந்தவர்களல்லவா? குதிரை வண்டியில் தான் செல்வதென்ற முடிவை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். கோபால் என்பவரின் குதிரை வண்டியை ஒழுங்கு செய்தோம்.

குதிரைகள் கோவேறு கழுதைகள் போல் இருந்தாலும், நமக்கு அது புதிய அனுபவம். வண்டியில் ஏறிக்கொண்டோம். அனைவரது முகத்திலும், இனம் புரியாத ஆனந்தம்.

ஒரு காலத்தில் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்ட போது சேர் பொன் இராமநாதன் அவர்கள் பிரிட்டிஷ"க்குச் சென்று, ஆங்கிலேய ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்திவிட்டு நாடு திரும்பிய போது குதிரைவண்டியில் இருத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றதாகவும், பின்னர் சிங்களவர்கள் குதிரைகளுக்கு ஓய்வுகொடுத்து அந்தப் பணியைத் தாமே செய்ததாகவும் அறிந்திருக்கின்றோம்.

**என். விஜயன்**

அப்போது சேர் பொன் இராமநாதனின் மனநிலை எப்படியிருந்ததென்று எமக்குத் தெரியாவிடினும், இப்போது குதிரை வண்டியில் செல்லும் நமக்கு இராமநாதனின் நினைப்பே ஏற்பட்டது. அந்த நினைப்பின் வெளிப்பாடாகவே, இனம் புரியாத ஆனந்தத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம். (வளரும்)

# பரு. பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தடகள விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கான பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையிலான தடகள விளையாட்டுப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 139 புள்ளிகளை எடுத்து முதலாமிடத்தையும் பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக் கழகம் 124 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் தொண்டைமானாறு ஐக்கிய விளையாட்டுக் கழகம் 59 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு:-

**உதைபந்தாட்டம் .(ஆண்)**

1 ஆம் இடம்:- வல்வை விளையாட்டுக் கழகம்

2 ஆம் இடம்:- பொலிகை விநாயகர் விளையாட்டுக்கழகம்

**உதைபந்தாட்டம் (பெண்)**

1 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் பரு.

2 ஆம் இடம்:- தீபஜோதி விளையாட்டுக்கழகம் புலோலி

**மென்பந்து துடுப்பெடுத்தாட்டம் (ஆண்)**

1 ஆம் இடம்:- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

2 ஆம் இடம்:- கழுகு விளையாட்டுக் கழகம் கெருடாவில்

**மென்பந்து துடுப்பெடுத்தாட்டம் (பெண்)**

1 ஆம் இடம்:- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

2 ஆம் இடம்:-சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் பரு.

**கரப்பந்தாட்டம் (ஆண்)**

1 ஆம் இடம்:- அண்ணா விளையாட்டுக் கழகம் தொண்டைமானாறு

2 ஆம் இடம்:- பாரதி விளையாட்டுக் கழகம் பொலிகண்டி

**கரப்பந்தாட்டம் (பெண்)**

1 ஆம் இடம்:- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

2 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் பரு.

**எல்லே (ஆண்)**

1 ஆம் இடம்:- பருத்தித்துறை விளையாட்டுக்கழகம்

2 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாட்டுக்கழகம்

**எல்லே (பெண்)**

1 ஆம் இடம்:- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

2 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாட்டுக்கழகம்

**கபடி (ஆண்)**

1 ஆம் இடம்:- துள்ளு மீன் விளையாட்டுக் கழகம்

2 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாட்டுக்கழகம்

**கபடி (பெண்)**

1 ஆம் இடம்:- சென்தோமஸ் விளையாடடுக் கழகம்

2 ஆம் இடம்:- தீபஜோதி விளையாட்டுக் கழகம்

**சிறந்த தடகள வீரர்**

110 M தடை ஓட்டம் 1 ஆம் இடம்:- ஏ.தொம்சன்-சென்தோமஸ்

100 M ஓட்டம் 1 ஆம் இடம்:- வி.கிருஸ்ணரூபன்-கழுகு விளையாட்டுக் கழகம்

200 M ஓட்டம் 1 ஆம் இடம்:-வி.கிருஸ்ணரூபன்-கழுகு விளையாட்டுக் கழகம்

400 M ஓட்டம் 1 ஆம் இடம்:- பு.தினேஸ்குமார்-தொண்டைமானாறு ஐ.வி.க.

800 M ஓட்டம் 1 ஆம் இடம்:- மோ.யோகேந்திரதாஸ்- தொண்டைமானாறு ஐ.வி.க.

1500 M ஓட்டம் 1 ஆம் இடம்:- இ.ஸ்ரீதரன்-கலைமணி வி.க.

5000 M ஓட்டம் 1 ஆம் இடம்:- இ.ஸ்ரீகரன்-கலைமணி வி.க.

1000 M ஓட்டம் 1 ஆம் இடம்:- இ.ஸ்ரீகரன்-கலைமணி வி.க.

குண்டெறிதல் 1 ஆம் இடம்:- சிவகணேசன்-மலாயன்சாண்டோ வி.க.

தட்டு 1 ஆம் இடம்:- சி.சத்தியராஜ் -பரு ஐக்கிய வி.க.

ஈட்டி 1 ஆம் இடம்:- த.ஜெபக்தராஜ்-வீனஸ வி.கழகம்

நீளம்பாய்தல் 1 ஆம் இடம்:- சி.சகீத்திரன்-பரு. ஐ.வி.க.

முப்பாய்தல் 1 ஆம் இடம்:- அ.சசிகுமார்-தொண்டைமானாறு ஐ.வி.

உயரம் பாய்தல் 1 ஆம் இடம்- மோ.யோகேந்திரதாஸ்-தொண்டைமானாறு ஐ.வி.க.

கோலூன்றிப்பாய்தல் 1 ஆம் இடம் :- தெ.சுகந்தன்- சென்தோமஸ்

**சிறந்த தடகள வீராங்கனை**

100 M தடை ஓட்டம் செதயாளினி - பரு. ஐ.வி.க.

100 M ஓட்டம் - அ.அனுசியா -கழுகு வி.க.

200 M ஓட்டம்- செ.தயாளினி- பரு. ஐக்கிய வி.க.

400 M ஓட்டம்- செ.குமுதினி -பரு. ஐ.வி.க.

800 M ஓட்டம் - இ.றொஷானி- தீபஜோதி வி.க.

1500 M ஓட்டம் - கிருபானந்தினி - சென்தோமஸ்

500 M ஓட்டம் - பெ.ஜமுனா - தீபஜோதி வி.க.

1000 M ஓட்டம் - பெ.ஜமுனா - தீபஜோதி வி.க.

குண்டெறிதல் - பா.மீரா- பருத்தித்துறை வி.க

தட்டு - பா.மீரா- பருத்தித்துறை வி.க.

ஈட்டி - இ.சரிதா- சென்தோமஸ்

நீளம்பாய்தல் - மேனுஜா - சென்தோமஸ்

முப்பாய்தல்- செ.குமுதினி - பரு. ஐக்கிய வி.க.

உயரம் பாய்தல் - செ.தயாளினி பரு. ஐக்கிய வி.க.

**சிறந்த தடவீரர் (ஆண்)**

வி.கிருஸ்ணரூபன் - 100 M (544 புள்ளிகள்) கழுகு வி.க.

**சிறந்த கள வீரர்**

நீளம் பாய்தல் - சி.சஜீந்திரன் (624 புள்ளி) பரு. ஐ.வி.க.

**சிறந்த தட வீராங்கனை**

200 M செ-தயாளினி -(636 புள்ளிகள்) பரு.ஐ.வி.க.

**சிறந்த கள வீராங்கனை**

நீளம்பாய்தல் - மேனுஜா (549 புள்ளிகள்) சென்தோமஸ் வி.க.

**வலைப்பந்தாட்டம்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் (ற-35)

## தொல்பொருள் காட்சிச்சாலை பாவனைக்காகத் திறப்பு

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் தொல்பொருள் காட்சிச்சாலை கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் பொதுமக்கள்பார்வைக்கெனத் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிச்சாலை திருத்த வேலைகளுக்கென கடந்த ஆறு மாதங்களாக மூடப்பட்டிருந்தது.

25 இலட்சம் ரூபா செலவில் காட்சியகத்தின் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காட்சிச்சாலையின் பொறுப்பாளர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்தார். (ற-49)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணுவது அரசின் தார்மீகப் பொறுப்பாகும்

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் இலங்கை அரசுக்கே தார்மீகப் பொறுப்பு உண்டு என்பதை அண்மைய நிகழ்வுகளின் ஊடாக சு.ப.தமிழ்ச்செல்வன் சுவிஸ் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக திருகோணமலை மற்றும் வவுனியா, ஓமந்தை புத்தர்சிலை விவகாரங்கள் மூலம் பேரினவாத சக்திகள் உருவாக்கி வரும்பதற்ற சூழல் ஆயுதக் குழுக்களை இராணுவமே உருவாக்கி பாதுகாத்து வருவது மற்றும் தமிழ் மக்களின் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியவற்றை விபரித்த தமிழ்ச்செல்வன் இத்தகைய நடவடிக்கைகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ் மக்கள் முழு அளவிலான நம்பிக்கை இழந்து வருவதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை முழுமையாகச் செயற்படுத்தி இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளதென்றும் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கொழும்பு நகரப் பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் அணிபற்றி ஆராய்வு

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் அணியினை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உயர் அதிகாரிகளிடையே கருத்துப் பரிமாறலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மற்றும் களுத்துறை விசேட செயலணிப் பயிற்சிப் பாடசாலையிலிருந்து வீரர்களை ஈடுபடுத்தவும் கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக விசேட பொலிஸ் அணியின் மோட்டார் சைக்கிள் பிரிவினை கொழும்பு நகரப் பாதுகாப்பிற்கு ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கு சமமாக கொழும்பு நகரப் பாதுகாப்பிற்காக 19 பொலிஸ் பிரிவுகளுக்குள் அமைந்துள்ள பிரதான சந்திகள், பாலம், இடைப்பாதைகள்உட்பட 50 இடங்களை உள்ளடக்கும் வகையில் தகவல் பரிமாற்றக் கருவிகளுடன் ஆயுதம் தாங்கிய பொலிஸாரை ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. எனினும் இது குறித்த உத்தியோகபூர்வ தகவல்களை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறமுடியவில்லை. (அ-5)

# வடமராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

வடமராட்சிக் கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. முதலாம் இடங்களைப பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| வாசிப்பு - | து.மாலோகன். | - மாணிக்கவாசகர் வித்தி. |
| வாசிப்பு - | ப.கௌதமன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| ஆக்கத்திறன் வெளிப்பாடு | - இ.திவாகரன் | - கரணவாய் தாமோதரம் வித்தி. |
| ஆக்கம் எழுத்து - | உ.கீர்த்தனா | - கரணவாய் தாமோதரம் வித்தி. |
| கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் | - வ.சுஜீவன் | - ஹாட்லிக் கல்லூரி. |
| கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் | - சு.தரணிகா | - வடமராட்சி ம.ம.கல்லூரி. |
| கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | - ஆ.மோகனப்பிரியா | - உடுப்பிட்டி ம.கல்லூரி. |
| தமிழியற் கட்டுரைவரைதல் | - மு.மயூரிக்கா | - விக்னேஸ்வராக் கல்லூரி. |
| இலக்கணப் போட்டி | - அ.தனுஸ்கா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இலக்கணப் போட்டி | - வே.கலைப்பரியா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| திறனாய்வுப் போட்டி | - சொ.வருணா | - விக்னேஸ்வராக் கல்லூரி. |
| குழு நாடக ஆக்கம் | - சி.சிவகுமாரன் | - விக்னேஸ்வராக் கல்லூரி. |
| குழு நாடக ஆக்கம் | - க.இளவரசன் | - விக்னேஸ்வராக் கல்லூரி. |
| கவிதை ஆக்கம் | - ப.தர்சிகா | - வட்டு.இந்து மகளிர் கல்லூரி. |
| கவிதை ஆக்கம் | - க.தர்சினி | - வட்டு.இந்து மகளிர் கல்லூரி. |
| சிறுகதை ஆக்கம் | - இ.கலைவாணி | - வட்டு.இந்து மகளிர் கல்லூரி. |
| சிறுகதை ஆக்கம் | - அ.ஜசிந்தா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| பேச்சு | - த.கோகுலன் | - மாணிக்கவாசகர் வித்தி. |
| பேச்சு | - ச.கார்த்திகாஜினி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| பேச்சு | - ஆ.மதுரா | - வட்டு.இந்து மகளிர் கல்லூரி. |
| பேச்சு | - பா.தர்மினி | - வட்டு.இந்து மகளிர் கல்லூரி. |
| பேச்சு | - த.விசோபன் | - ஹாட்லிக் கல்லூரி. |
| பாவோதல் | - கி.அபிரா | - நெல்லியடி ம.ம.வித்தி. |
| பாவோதல் | - பு.ஆரணி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| பாவோதல் | - ரா.சோபனா | - உடுப்பிட்டி ம.கல்லூரி. |
| பாவோதல் | - இ.தயானி | - அல்வாய் சின்னத்தம்பி வித்தி. |
| பாவோதல் | - செ.சுகன்யா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசையும் அசையும் | - மு.வெண்ணிலா | - வட.இந்து மகளிர் கல்லூரி. |
| இசை தனி | - சி.ஜீவற்திகா | - உடுப்பிட்டி ம.கல்லூரி. |
| இசை தனி | - இ.அபிராமி | - இமையாணன் அ.த.க.பா. |
| இசை தனி | - கௌ.சரண்யா | - நெல்லியடி ம.ம.வித்தி. |
| இசை | - க.தூசியா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - சி.சிவநந்தினி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - சி.காயத்திரி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - ஈ.அகல்யா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - நா.மயூரி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - சி.நிரஞ்சனா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - ம.சஞ்சீபா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - இ.சரண்யா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - யோ.ராஜீன் | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - செ.அபர்ணா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| இசை | - த.இ.ஜெனரீஸ்வரன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - சி.சத்தியாராம் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - சி.சுருதில்யம் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - இ.கோபிராகவன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - சி.ஹரிகரன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - ம.பிரசாந் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - து.தயாதர்சன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - கு.சஜீபன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| இசை | - ம.கஜேந்திரன் | - உடுப்பிட்டி அ.மி.க. |
| நடனம் தனி | - க.ஆர்த்திகா | - மாணிக்கவாசகர் வித்தி. |
| நடனம் தனி | - வி.அபிராமி | - மெதடிஸ்த. பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - ச.துவாரகா | - வடமராட்சி ம.ம.க. |
| நடனம் தனி | - து.ஜீவதா | - உடுப்பிட்டி ம.க. |
| நடனம் தனி | - கஜீதா. | - வடமராட்சி ம.ம.க. |
| நடனம் தனி | - சி.நளினா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - செ.அகிலாயினி | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - ச.சோபிதா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - ம.யூகல்கா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - இ.சாரங்கா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் தனி | - யோ.கீர்த்திகா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் | - ஜ.யோர்கல்யா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் | - வி.தனுசா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நடனம் | - கொ.பானுசா | - மெதடிஸ்த பெ.உ.த.பா. |
| நாட்டிய நாடகம் | - ம.செல்வராஜினி | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - ம.மயூதின் | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - பொ.லக்சனா | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - சோ.தீபிகா | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - ச.சுகி | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - சி.நிதுசா | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - ப.கலைவாணி | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - செ.ரஜித்தா | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாட்டிய நாடகம் | - க.கார்த்திகா | - தொண்டமனாறு வீ.ம.வித்தி. |
| நாடகம | - வெ.சிந்துஜன் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | -க.செந்துஜன் | - வதிரி வடக்கு மெ.மி.த.க. பா. |
| நாடகம | - த.பிரதீப் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா |
| நாடகம் | - சா.கோகுலன் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - அமீர்கான் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - து.சிஜநதன் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - செ.அஜித்குமார் | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - சி.நிகிந்திகா | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - ந.தரணிகா | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - ச.சோபிகா | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| நாடகம் | - த.தர்சிகா | - வதிரி வடக்கு மெ.மி.த.க.பா. |
| வில்லுப்பாட்டு | - அ.கணேஸ்குமார் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | - த.கிரிதரன் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | -ஸ்ரீ.சேயந்தன் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | -வி.ஜெயகீதன் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | -இ.றமணன் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | -ச.சாந்தசிவம் | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| வில்லுப்பாட்டு | -ஜெ.சிவராசா | - உடுப்பிட்டி அ.மெ.மி. |
| விவாதம் | -இ.அபினேஸ் | - தொண்டமனாறு மகா வித்தி. |
| விவாதம் | -ப.சுமதா | - தொண்டமனாறு மகா வித்தி. |
| விவாதம் | -கு.துசிந்தா | - தொண்டமனாறு மகா வித்தி. |
| தமிழறிவு வினா விடை போட்டி | - சி.ரவிசாற் | - விக்கினேஸ்வராக் கல்லூரி. |
| தமிழறிவு வினா விடை போட்டி | - பி.ரவேந்திரன | - விக்கினேஸ்வராக் கல்லூரி. |

(நாளை தொடரும்...)

# இடை நிலைக் கல்வி அபிவிருத்திக்கு ஆசிய அபி. வங்கி ரூ. 500 கோடி உதவி

(கொழும்பு)

கல்வியமைச்சின் இடைநிலை கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டதத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 500 கோடி ரூபாவை நிதியுதவியாக வழங்க இணங்கியுள்ளது.

இந்தத் திட்டம் 2010 ஆம் ஆண்டுவரை 5வருடகாலத்திற்கு செயல்படுத்தப்படுமென்று கல்வியமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இடைநிலைக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது கட்டம் 2001ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படடு இந்த ஆண்டு வரை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் 2 ஆயிரத்து 300 இரண்டாம் கட்ட பாடசாலைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 800 கோடி ரூபாவை இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் கட்டத்தில் மேலும் ஆயிரத்து 200 பாடசாலைகள் சேர்ததுக் கொள்ளப்படவுள்ளன.

(ற-9)

# புலிகளின் வான்படை எவ்விதமும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகாது

## இந்தியப் பிரதமருக்கு வை.கோ உறுதி

(புதுடில்லி)

இந்திய இலங்கை கூட்டறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் யுத்த நிறுததம் மீறப்படுவது பற்றியும் புலிகளின் வான்படைகள் குறித்த விமர்சனம் ஆகியவை இடம்பெற்றுள்ளமைக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தமிழ்நாட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோபால்சாமி நேரில் வருத்தமும், எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிர்தமர் மன்மோகன்சிங்குடனான சந்திப்புகள் குறித்த மேலதிக தகவல்களை வழங்கிய அவர் இலங்கையுடன் இந்தி அரசு இராணுவ ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் அது இறுதியில் அங்குள்ள தமிழர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிராகவே முடியுமென்று இந்தியப் பிரதமரிடம் தான் வலியுறுத்தியதாகவும் அதற்குப் பிரதமர் அத்தகைய ஒப்பந்தம் எதையும் செய்துகொள்ளும் எண்ணம் இந்தியாவிற்கு இல்லை என்று தன்னிடம் உறுதியளித்ததாகவும் தெரிவித்துள்ளார். அவருடைய கூற்றில் தனக்கு முழுநம்பிக்கை உண்டு. விடுதலைப்புலிகள் வைத்துள்ளதாகக் கூறப்படும் விமானங்கள் விமான ஓடுதளம் என்பன உண்மையில் அவர்களிடம் இருந்தாலும் அவை இந்தியாவுக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக இருக்காதென்று தான் உறுதியாகப் பிரதமரிடம் தெரிவிததாகக் குறிப்பிட்ட அவர் இது தொடர்பாகப் பிரதமரிடம் தான் முறைப்பாட்டு மனு ஒன்றையும் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ5)

# சீருடை தையல் கூலி வழங்கக் கோரிக்கை

(துன்னாலை)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் கடந்த 3 வருடங்களுக்கான சீருடை தையல் கூலி கிடைக்காததினால் விசனமடைந்துள்ளனர்.

தற்போது சம்பள அதிகரிப்பு வழங்கப்படடாலும் பொருட்களின் விலை அதிகரிப்பால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் வருடத்துக்கு ஒரு தடவை மானியமாகக்கிடைககும் சீருடைத் துணிக்கு தையல் கூலியைத் தமது பணத்தில் கொடுத்தே தைத்து அணிவதாகவும் சீருடை அணியத்தவறின் குற்றப்பணம் அறவிடபபடுவதாகவும் தெரிவித்தனர். ஆதலால் தமக்குக் கிடைக்க வேணடிய தையல் கூலி நிலுவைப் பணத்தை பெற்றுததர ஆவன செய்யும்படி பொறுப்பதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (து-101)

## கொத்தணி பஸ் கம்பனிகளில்

# சுயவிருப்பில் இளைப்பாறல் விண்ணப்பம் முடிவுத்திகதி பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொத்தணி பஸ் கம்பனிகளில் தாமாகவே முன்வந்து இளைப்பாற விரும்பும் ஊழியர்களின் வண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இதற்கான விண்ணப்பங்கள் குறைவாகவே கிடைத்துள்ளன.

மேலும் தகவல்களை திரட்டும்போது இந்த முடிவுத்திகதி நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விண்ணப்பங்களை நிரப்பினார்கள் என்ற காரணத்திற்காக ஊழியர்கள் தாமாகவே விரும்பி இளைப்பாற வேண்டிய அவசியம் இல்லை என்றும் விரும்பினால் அவர்கள தமது விண்ணப்பங்களை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அமைச்சு தெரிவிததுள்ளது.

ஊழியர்கள் மத்தியில் தாமாகவே முன்வந்து இளைப்பாறும் திட்டத்திற்கான ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு அமைச்சு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடை முறைப்படுத்தவுள்ளது.

இருந்த போதிலும் தொழிற் சங்கங்கள இதற்கான ஆட்சேபனையை வன்மையாகத் தெரிவித்துள்ளன.

(அ-9)





சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பினா நடாத்திய மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு மிகவும் எழுச்சிகரமாக சூரிச் மாநகரில் நேற்று முனதினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் குலம் ஈகைச் சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை மாலதி படையணி போராளியும் எழுத்தாளருமான கலைமகள் ஏற்றி வைத்தார்.

தேசிய கொடியேற்றலைத் தொடர்ந்து மண்டபத்தில் கூடியிருந்த அனைத்து மக்களும் தியாகி சிவகுமாரனின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். (ற)

# அதிக உழைப்பும் ஆபத்தும்



எந்த உறுப்புக்களையும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவது இயலாமையை உண்டாக்கும் என்பது பலருக்குத் தெரிந்திராத விஷயம். இதற்கு 'ஓவர் யூஸ் சிண்ட்ரோம்' என்று பெயர்.

**இந்தநோயால் அதிகம் பாதிக்கப்படுவோர்**

கொஞ்சநேரம் மட்டும் ஓய்வெடுத்துக் கொண்டு இயந்திரம் மாதிரி எப்போதும் வேலை செய்பவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகமாக வரும். நடக்கும்போது ஒழுங்கு முறையாக நடக்காமல் வளைந்து நெளிந்து நடப்பவர்கள், உட்காரும்போது நிமிர்ந்து உட்காராமல் முதுகை வளைத்துக் கொண்டு உட்காருவோர், நிமிர்ந்து நடக்காதவர்கள் களைப்பாக இருக்கும்போது கூட வேலை செய்பவர்கள் போன்றவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகம்.

இதற்கு முன்பெல்லாம் கம்ப்யூட்டரில் அதிக நேரம் வேலை செய்பவர்களுக்கு மட்டுமே இந்தப் பிரச்சினைகள் பெரிய அளவில் வருகிறது என நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இசைக்கலைஞர்கள், டெய்லர்கள், கூட்டாக அமர்ந்து சீட்டு முதல் பல்வேறு விளையாட்டுகளை விளையாடுபவர்கள், கிரிக்கெட் விளையாடுவோர், கார்பென்டர்கள் என உடலைத் தொடர்ச்சியாக அசைத்து அசைத்து வேலைசெய்யும் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகமாக வரும் என்கின்றனர் வைத்திய நிபுணர்கள்.

**பாதிப்பு அதிகமாகும் இடங்கள்**

மிக அதிகமாக கைகள், மணிக்கட்டுகள, முழங்கைகள், தோள்பட்டைகள், கணுக்கால்கள் போன்ற இடங்கள் அதிகமாக பாதிக்கப்படுகினறன என்றாலும் உடலின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் மூட்டு இருக்கும் இடத்தில் இந்தப் பாதிப்புகள் வரலாம்.

**அறிகுறிகள்**

வலி, பலவீனம், வீக்கம், உள்ளே எலும்பு ஆடுவது போன்ற உணர்வு, ஊமை வலி, பாதிக்கப்பட்ட இடத்தில் சிவந்து வீங்கியிருத்தல், பாதிக்கப்பட்ட பகுதியில் அசைவு குறைந்திருதல், விரைப்புத்தன்மை போன்றவை இருக்கும்.

பெரும்பாலான நபர்களுக்கு பாதிக்கப்பட்ட பகுதியை எளிதில் நீட்டவோ மடக்கவோ முடியாத நிலை மட்டும்தான் அதிகம் இருக்கும்.

உறுப்புக்களை அதிகமாகப் பயன்படுத்துவதால்தான் கார்பல் டன்னல் சிண்ட்ரோம், எபிகாண்டைலிடிஸ் காங்கிலியன் சிஸ்ட், டெனோசினோ விடிஸ், டென்டனிடிஸ் போன்ற பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன.

இவற்றையெல்லாம் உடனடியாகக் கண்டுபிடித்து சிகிச்சை செய்துவிடவேண்டும். இல்லாவிட்டால் நிரந்தரமாக தசைநார்கள் இறுக்கப்பட்டு உறுப்புகள் ஊனமுறும் நிலை உண்டாகும்.

**சிகிச்சை**


உறுப்புக்களை ஒரேயடியாகப் பயன்படுத்துவதைக் குறைத்துக கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதியில் ஐஸ் ஒத்தடம, நவி விடுதல், தளர்த்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இதற்கு மருந்து சிகிச்சையில் வலி நிவாரணிகள், அழற்சி நீக்கி மருந்துகள், சில ஸ்டீராய்டுகள் ஆகியவற்றைப பரிந்து வைப்பார்கள்.

என்னதான் எடுத்துக் கூறினாலும் யாரும் முழு அளவில் ஓய்வெடுத்துக் கொள்வதில்லை. இதுதான் இந்தப் பிரச்சினை அதிகரிப்பதற்கு ஒரு முக்கிய காரணம்.

இந்தப் பிரச்சினை ஏன் வந்தது? இதை மாற்ற என்னென்ன செய்யலாம்? என்பதையெல்லாம் முழுமையாக ஆராய்ந்து அதற்கேற்ப சிகிச்சையளிக்க வேண்டும். உதாரணமாக, சரியில்லாத நாற்காலியில் அமர்ந்திருப்பது, கீ போர்ட்டை நீண்டநேரம் பயன்படுத்துவது, ஒரேயடியாக குனிந்தோ நிமிர்ந்தோ வேலை செய்து கொண்டிருப்பது போன்ற பிரச்சினைகள் இருக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள் இவற்றைக் கவனத்தில் கொண்டு இந்த நிலைகளை மாற்றி அமைத்துக் கொண்டால் பிரச்சினையின தீவிரம் குறையும்.

கொஞ்சம் வயதாக ஆரம்பித்துவிட்டால் பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கிவிடும் என்பதை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இந்தப் பாதிப்பின் அளவுகள் ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிகம் வரும் என்பதால் பெண்கள் கூடுதல் கவனத்தோடு இருப்பது நல்லது.



# அப்பிள்களில் சிறந்தது எது?

அப்பிள் பழங்களில் பல வகைகள் இருக்கின்றன. போதிலும் சிவப்பு நிற அப்பிள்கள் மிகவும் சிறந்தவை. 'பாலிபெனால்ஸ'எனப்படும் நோய் எதிர்ப்பு பொருள் மற்ற அப்பிள்களை விட இதில் நிறைய இருப்பதாக அறிஞர்கள் தெரிவ'க்கின்றனர். 'பாலிபெனால்ஸ்' அதிகமாக இருக்கும் பழங்களின் சதை மற்றும் தோல் பகுதியைச் சாப்பிடுவதன் மூலம் நல்ல ஆரோக்கியம் கிடைக்கும். மற்ற வகை அப்பிள. பழங்களுடன் ஒப்பிடும்போது சிவப்பு அப்பிளில் பாலி பெனால்கள் 2மடங்கு கூடுதலாகக் காணப்படுகிறது.

**பாலிபெனால்ஸியின் பயன் என்ன?**

பாலிபெனால் நோய் எதிர்ப்பு பொருட்கள நமது உடம்பில் சுதந்திரமாகத் திரியும் பிரிரேடிக கல்ஸ் என்ற துகள்களால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து உடம்பைக் கவசம் போல பாது காக்கிறது. இருதய நோய்கள், புற்றுநோய், அல்சீமர் போன்ற மூளை பாதிப்புகள் ஆகிய சிக கல்களுக்கு இந்த பிரீரேடிக்கல்ஸ்தான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

எலிகளைப் பயன்படுத்தி நடந்த ஒரு ஆய்வில், அப்பிள் பழத்தில் காணப்படும quercetin என்ற பொருள் மூளை செல்களை பிரிரேடிக்கல்ஸ் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதாகத் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வை மனிதர்களிடம் இனிமேல் தான் செய்து பார்க்க வேண்டும். இதுபோல அப்பிள் மார்பகப் புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு அளிப்பதாக கூறப்படுகிறது. ஆனால் அதுவும் எலிகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பொதுவாக அப்பிள் சாப்பிடும் போது தோலை சீவி விட்டுச் சாப்பிடக் கூடாது. நன்றாகச் சுத்தமாக கழுவிவிட்டு, அப்படியே சாப்பிட வேண்டும். ஏனெனில் அப்பிள் பழத்தின் தோலில்தான் நிறைய நோய் எதிர்ப்பு சத்துக்கள உள்ளன.


# தக்மா!

மவுனகோபுரம் அல்லது தக்மா என்று அழைக்கப்படும் கோபுரம் 25அடி உயரம் கொண்டது. இந்த கோபுரத்தில் பார்சி சமூகத்தினர் தங்களது பிணங்களைக் கொண்டுவந்து போட்டுவிடுவர்.

இவர்கள் இனத்தில் பிணத்தை எரிப்பதோ, புதைப்பதோ கிடையாது. இப்பிணங்களை வல்லூறுகள், கழுகுகள், ராஜாளிகள் மற்றும் மற்ற பறவை இனங்கள் தின்னும். இறந்த பிறகும் தங்கள் உடல் மற்ற உயிரினங்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் இப்படிச் செய கின்றனர்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 64

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'காதல் கொண்டேன்' மூலம பிரபல நாயகியான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 13 ஆம் திகதிக்கு முனனர் கிடைககக் கூடியதாக அனுபபிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 64**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**


குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவு செய்யபபடடு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-64**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-......................... |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-......................... |
| அனுப்புபவரின் முகவரி | :-......................... |
| | ......................... |
| | ......................... |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 62**
**சரியான விடை**

நடிகா விக்ராந்

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 62இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | மா.வேலாயுதம் கண்டி வீதி, சாவகச்சேரி. |
| இரணடாம் பரிசு | :~ | T.அபிராம் காரைநகர் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :~ | தே.றஞ்சித் அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

அ.நாகசொரூபி, மானிப்பாய். வே.குமாரசுவாமி, கரவெட்டி. கே.ஏ.வரன், புத்தூர். லோ.வித்தியன், சங்கானை. ம.மதியழகி, உரும்பிராய். ச.கஜசங்கவி, இணுவில். S.தரன், சண்டிலிப்பாய். வே.ஆரபி, காரைநகர். வ.குமரன், புலோலி. ச.தாரணி, உடுவில். ந.கரன், ஏழாலை. வ.சோபிதா, வடலியூர். சொ.நித்தியா, கொக்குவில். S.திவ்வியசசி, சித்தன்கேணி. த.மாதங்கி, தம்பசிட்டி. K.புஸ்பராணி, தம்பசிட்டி. க. பாக்கியராஜ், சாவகசசேரி. வே.சுபாஷினி, மானிப்பாய் திருமதி. பா.செல்வராணி, சங்கானை. சி.கோவிந்தராஜன், யாழ்ப்பாணம். சி.சாவித்திரி, நல்லூர். மு.வினோத்குமார், காரைநகர். ம.ஜனா, உடுவில. சா.சாயினி, சுதுமலை. கோ.கோபிகா, கொக்குவில். ப.ஆனந், வண்ணார்பண்ணை. இ.வாசுகி, இணுவில். லோ.அபிராமி, வல்வெட்டி. து.நக்கீரன், மல்லாகம். சோ.கவி, யாழ்ப்பாணம்.

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 14

இலங்கையின் தமிழ்பேசும் சிறுபான்மையினருக்கு பேரினச் சிங்கள-பௌத்தர்கள் பற்றியுள்ள அச்சத்தையும், தமது பிரதேசம் பறிபோய்விடுமோ வென்ற ஏக்கத்தையும் உணர்த்தி நிற்கிறது என்று கூறலாம். இன்று முற்றி முறுகிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தக் குடியேற்றப் பிரச்சினையே சிக்கல் நிறைந்ததொன்றாயும் தலையானதாயுமிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

### அரச கரும மொழிச் சட்டம்

இலங்கையில் இருமொழி பேசும் இனக்குழுவினரே பெரும்பாலும் உள்ளனர் என முன்னரே கண்டோம். மொழியோ, மனிதனை இலகுவில் உணர்ச்சி காணச்செய்து விடக்கூடிய ஊடகம். அந்த மொழியின் காரணமாக எழுகின்ற இன உணர்வு நிலையாலேயே, மிக அதிகமான நாடுகளில் தேசிய இனப்பிரச்சினைகள் சுடர்விட்டு எரிகின்றன. இலங்கையும் அதற்கு விதி விலக்கல்ல. 1956ஆம் ஆண்டு ஆனிமாதம் 5ஆம் திகதி இலங்கையின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ''சிங்களம் மட்டும்'' அரசகரும மொழிச் சட்டமானது, இதுவரை காலமும் நிலவிவந்த இலங்கையின் ஒருமைப்பாட்டினைத் துண்டுசெய்யும் சட்டமாக அமைந்தது எனக் கூறலாம். திடீர் அரசியல் ஆதாயங்களுக்காக நீண்டகால நோக்கில் சிந்தியாது அரசியல்வாதிகள் விட்ட தவறுகள், நம் நாட்டினைப் படிப்படியாகப் பூகம்பங்கள் நிறைந்த தேசமாக்கிவிட்டது. வழிவழியாக வந்த இனரீதியான சிந்தனைக்களுக்கெல்லாம் ''சிங்களம் மட்டும்'' சட்டமே தாயாகி நின்றது. 33ஆண்டுகள் கடந்தபின்னர் அச்சட்டத்தின் தவறுகள் திருத்தப்பட்டுத் தமிழும் ஆட்சிமொழியாக்கப்பட்ட போதிலும்கூட அது ஏற்படுத்திய பக்கவிளைவுகள் பாரிய பலங்கொண்டு நின்று அழுத்தி, இந்து சமுத்திரத்தின் நித்திலமாகிய நம் தாயகத்தைக் குமுறும் எரிமலையாக்கித் தகிக்க வைத்துள்ளது.

சுதந்திரம் பெறும்வரையிலான காலத்தில் ஆங்கிலமே இலங்கையின் ஆட்சி மொழியாய் அமைந்திருந்தது. சுதந்திரத்துக்கு முந்திய இறுதிப் பகுதிகளிலே சுதேசிய மக்களின் நிர்வாக அதிகாரம் ஓரளவுக்கு ஏற்பட்டு விட்டமையினால் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் ஒரேநிலை அளிக்கப்பட்டது. மேலும் சுதந்திரத்திற்குப் பிந்திய 1956ஆம் ஆண்டு வரையும் இருமொழிகளும் சம அந்தஸ்து நிலையிலேயே பேணப்பட்டன. இருப்பினும் ஆங்கிலத்துக்குப் பதிலாகத் தேசிய மொழிகளை ஆட்சி மொழிகளாக்க வேண்டுமென்ற எண்ணங்கள் அரசியல்வாதிகள் சிலரைப் பொறுத்த வரையில் இனரீதியான கண்ணோட்டங்களை வளர்ப்பனவாகவே காணப்பட்டன. 1944 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் அரசாங்க சபையில் கொண்டுவந்த தீர்மானமொன்றில், ''இலங்கையின் சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் போதனா மொழி சிங்களமாக இருக்க வேண்டும். அத்துடன் எல்லா அலுவலகங்களிலும் சேர்வதற்கான பரீட்சையும் சிங்களமாக இருக்க வேண்டும்'' எனக் கோரினார். இருந்தும் அவரது கோரிக்கையானது நிராகரிக்கப்பட்டுச் 'சிங்களத்துடன் தமிழும்' ஆட்சிமொழிகளாக இருத்தல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் ''சிங்களம் மட்டும்'' சட்டத்தின் பிதாமகரான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவோ,

''இவ்விரு மொழிகளும் அரசகரும மொழிகளாகக் கொள்வதில்
எனக்கு எத்தகைய தனிப்பட்ட எதிர்ப்பும் கிடையாது.
இதனால் எத்தகைய தீங்கோ, அபாயமோ ஏற்படும்
என்றும் நான் கருதவில்லை''

என்று அப்போது கூறியிருந்தார். 1951இல் அவர், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்துசென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்தபோது கூட அவருடைய மொழிக் கொள்கைகளானது,

''சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரசகரும
மொழியாக்குதல் வேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டு
மக்கள் தமது சொந்த நாட்டிலேயே அன்னியராக இருக்கும்
நிலை ஒழியும். சிங்களம் மூலமும், தமிழ் மூலமும் கல்வி
கற்றோர் இன்று வாழ்க்கையீன் கடைநிலையில் இருப்பதற்கு
முடிவுகட்டலாம்''

என்பதாகவே இருந்தது. ஜோன் கொத்தலாவலையவர்கள் பிரதமராய் இருந்த காலத்திலேயே 'சிங்களம் மட்டும்' கொள்கை வலுப்பெறத் தொடங்கிவிட்டதெனலாம். அதன் மீதான அரசியல் நலன்கருதிய பிரசாரங்களும் வலிமைபெறக் காணப்பட்டன. மேலும், ஆங்கிலம் ஆட்சி மொழியாயிருப்பதனால் தேசிய ரீதியில் பாதிப்புக்குள்ளான பலதிறத்தினரும் சிங்கள மொழிக்கோட்பாட்டைத் தீவிரமாக ஆதரித்தனர். சிங்களத்தில் கல்வி கற்ற ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், கலைஞர்கள், பௌத்த பிக்குகள் மற்றும் குட்டிப்பூர்சுவா வர்க்கத்தினர், நிலச்சுவாந்தார்கள் எனப் பாரியதோர் மக்கட்குழுவினர் இதன் பின்னணியில் நின்றனர். பௌத்த-சிங்கள மறுமலர்ச்சியும் சிங்கள மொழியின் மேலாதிக்கத்துக்குத் துணைபுரிவதாயமைந்தது.

இலங்கை ஒரு பலதேசியவின நாடென்பதையோ அல்லது தமிழும் ஒரு தேசிய மொழிதானென்பதையோ கருதாமல் குறுகிய இனவாதத்தினுள் அரசியல்வாதிகள் பலரும் சரண் புகுந்தனர். இவர்கள் பலரும் சாமான்ய மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டனர். தூரநோக்குடன் சிந்திக்க மறுத்துவிட்டனர். அதன் விளைவாக 1944இல் சாதிக்க மறந்ததை பெரும்பான்மைப் பலத்தின் உதவியுடன் 1956இல் சாதித்துக் கொண் டனர். ஆனால் தொலைப் பார்வையற்ற இந்த அரசியல்வாதிகள், தாங்கள் சாதனையாகக் கருதிய இவ்விடயமானது நாட்டிற்கு ஏற்பட்ட சோதனையாக முடியுமென்பதை எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர்.

1956ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஐக்கிய சேதியக்கட்சியின் மாநாடானது களனியில் நடைபெற்றபோது, சிங்கள மொழியை மட்டுமே அரசகரும மொழியாக்குதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. முன்னர் ஒருதடவை (1954இல்) பிரதமராயிருந்த சமயம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு விஜயம் செய்தபோது, தமிழுக்குச் சம அந்தஸ்து என்று சேர்.ஜோன் முழக்கிவிட்டுப் பின்னர் களனிக்குச் சென்று ''சிங்களம் மட்டும்'' என்று சங்கநாதம் செய்தார். இதைப் போலவே பண்டாரநாயக்கா அவர்களும் தம் நிலையினின்றும் பிறழ்ந்து புதிய ''சிங்களம் மட்டும்'' கொள்கையை அரவணைத்துக் கொண்டார். முன்னர் புகழ்பெற்ற முற்போக்குவாதியாகத் திகழ்ந்த பிலிப் குணவர்த்தனா அவர்களோ ''சிங்களம் மட்டும்'' சட்டத்தை ஏற்றுக் கொண்ட முதலாவது இடது சாரி யானார். இப்படியே நடைபெற்ற அரசியல் சூதாட்டத்தில் தமிழ் பேசும் மக்களினது தலையாய உரிமைகள் பலவும் படிப்படியாக உருளத்தொடங்கினவெனலாம். 1956 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பிரதானமாகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிபெற்று ஆட்சிப்பீடத்திலமர்ந்தது. அதிஷ்டகரமான அரசியல் ஆதாயத்தை எதிர்பார்க்க பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கும் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். (தொடரும்)

# வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்

(ஏதென்ஸ்)

சிரிக்கும்போது மனித உடலில் உள்ள கூடுதல் கலோரி எரிக்கப்படுகிறது.சிரிக்கும் போது மக்கள் புத்துணர்ச்சி பெறுகின்றனர்.

அது உடலுக்கு நல்ல மருந்து என்று மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவில், டென்னெஸ்சி மாகாணத்தல் உள்ள நாஸ்வில்லேவில் நடந்த மருத்துவ மாநாட்டில் வண்டர்பில்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தைச் சேர்ந்த மசிஜ் பவுச்சோஸ்கி பேசியதாவது,

மனித உடலில் உள்ள கூடுதல் கலோரி, சிரிப்பது மூலம் எரிக்கப்படுகிறது. தினமும் 10முதல் 15நிமிடங்கள் சிரித்தால் 10முதல் 40 கலோரி வரை எரிகிறது. சிரிப்பது நல்ல மருந்து. சிரிப்பதன் மூலம் உடலில் ஆற்றல் உருவாகிறது என்பதை நாங்கள் கண்டுபிடித்துள்ளோம்.

சிரிப்புப் பற்றி சோதனை நடத்த 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தோம். அவர்களில் பலர் நண்பர்கள், காதல் ஜோடிகள் இரண்டு,இரண்டு பேராக 'டிவி'யில் சிரிப்பு.

காட்சிகளைப் பார்க்கச் செய்தோம் அந்தக் காட்சிகளைப் பார்த்து சிரிக்கும் போது, அவர்கள் உடலில் எவ்வளவு ஆற்றல் செலவாகிறது, எவ்வளவு ஆற்றல் உருவாகிறது என்பதைக் கணக்கிட்டோம். இருதயத் துடிப்பையும் அளவிட்டோம்.

சிரிப்பு குறித்து சோதனை நடத்துவதாக அவர்களிடம் நாங்கள் கூறவில்லை. பேசவும்,நடக்கவும் கூடாது என்று மட்டும் தெரிவித்தோம். சிரிப்பு பற்றி சோதனை நடத்துவதாகக் கூறியிருந்தால் சிலர் வலுக் கட்டாயமாக சிரிப்பார்கள் என்பதால் இப்படிச் செய்தோம். சோதனையில் பெண்களை விட ஆண்கள் அதிகம் சிரித்தனர். அதிகபட்சமாக 40 வினாடிகள் தொடர்ந்து சிரித்தனர். மனித உடலில் நடக்கும் வழக்கமான வளர்சிதை மாற்றத்தைவிட, சிரிக்கும் போது கூடுதலாக 20 சதவீதம் வளர்சிதை மாற்றம் ஏற்பட்டதைக் கண்டு பிடித்தோம். இவ்வாறு மசிஜ் கூறினார். (ற)

# பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீள்கொடுப்பனவு ஆராயப்படும்

(கொழும்பு)

உள்ளூர் வர்த்தகப் பிரமுகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அமைச்சர்கள் ரோகித போகல்லாகமவும், கலாநிதி சரத் அமுனுகமவும் உள்நாட்டு இறைவரி அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்த இருக்கின்றனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஏற்றுமதி மன்றத்தின மாநாட்டில் அமைச்சர் ரோகித போகல்லாகம உரையாற்றுகையில்,

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் மீள்கொடுப்பனவு பற்றி விரைவில் ஆராயப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

உள்நாட்டில் இறைவரித் திணைக்கள அதிகாரிகளுடனான பேச்சுக்களின் போது இந்த விடயம் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

பல ஏற்றுமதி நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோளில் தங்களுக்கான மீள்கொடுப்பனவுகளைப் பெற்றுத் தருமாறு கேட்டிருந்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த மீள் வழங்கலை மேற்கொள்வதற்காக நிதி எதுவும் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லையெனத் தெரிவித்துள்ளது.

இத்தகைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசாங்கம் மாற்று வழிமுறைகளை அறிமுகம் செய்ய வேண்டுமென்பது உற்பத்தியாளர்களின் கருத்தாகும். (அ-9)

# நாய்க்கடிக்கு உடன்சிகிச்சை பெற்றுக்கொள்க! சுகாதார சேவைகள் திணைக்களம் வேண்டுகோள்

(சுதுமலை)

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் விலங்கு விசர் நோயைக் குறைக்கும் நோக்கில மக்களை, நாய்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்குமாறுகோரி சுகாதார சேவைகள் திணைக்களம் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் பலர் நாயினால் கடியுண்டு உரிய முறையில் தடுப்பூசிகளை ஏற்றாததனால் மரணமடைந்துள்ளதாகவும் குறிப்பாக, சிறுவர்களை நாய்க்கடியில் இருந்து பாதுகாப்பது அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டும் அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

நாயின் எச்சிலில் உள்ள ஒரு வகை வைரஸ் காரணமாகவே இறப்புகள் ஏற்படுகின்றது. இவ் வைரஸ் கிருமிகள் நரம்புத் தொகுதியைத் தாக்குவதைத் தடுக்க நாய்களுக்கு உரிய சிகிச்சை பெறாவிடில் சில நாட்களிலும், பலவருடங்களின் பின்பும் மரணம் சம்பவிக்கலாம்.

நாய் கடித்ததும் உரிய வைத்தியரை அணுகி அவரது ஆலோசனையுடன் உரியவகையில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளவேண்டும். நாய் கடித்த காயம் ஆறிவிட்ட பின்பும் ஏ.ஆர்.வி.தடுப்பூசி போடுவதை நிறுததாது தொடர்ந்து போடவேண்டும். வீட்டிலே நாய்களைக்கட்டி வளர்க்க வேண்டும். தேவைக்கு அதிகமாக வீட்டிலே நாய்களை வளர்க்கக்கூடாது. உரியமுறையில் வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு தடுப்பூசிகளை இடுதல் வேண்டும்.

நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை போன்றவற்றை கால்நடை வைத்தியரின் சிபார்சுடன் செய்து கொள்ளலாம்.

நாய்களில் ஏற்படும் இந் நீர் வெறுப்பு நோயை குடாநாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்றுள்ளது. (து-252)

# இருளில் மூழ்கியுள்ள நெல்லியடி

குடாநாட்டு மக்கள் பலரும் பயன்படுத்துகின்ற நெல்லியடி நகர் கடந்த ஒருமாத காலமாக மின்ஒளி இன்றி இருளில் மூழ்கியுள்ளது. வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த ஒரு சில மின்குமிழ்களும் செயலிழந்து காணப்படுவதால் இரவு நேரங்களில் பயணிகள் குறிப்பாக பெண்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகுவதாகவும், வர்த்தக நிறுவனங்களின் ஒளியைப் பயன்படுத்தியே தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நகரை நிர்வகிக்கும் பிரதேசசபையும் மின்சாரசபையும் இக் குறைபாட்டை நிவீர்த்திசெய்ய கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (து-101)

# இளைப்பாற்று நிலையம்

போரினால் பாதிப்புற்ற பிள்ளைகள் இளைப்பாற்று நிலையம் ஒன்று கரவெட்டி கோவிற்சந்தை பெரிய பாலத்தடியில் திறக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை கிறிஸ்தவ வாலிபர் சங்க அனுசரணையில் கரவெட்டி கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை போதகர் அருள்திரு டி.அழகராஜாவின் மேற்பார்வையில் மேற்படி நிலையம் இயங்கிவருகிறது. தினமும் விளையாட்டுக்கள், கருத்தரங்குகள், பயிற்சிகள், பட்டறைகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. (து-101)

# ஆங்கில அறிவினை மேம்படுத்தும் வெளிச்ச வீட்டுப் பாடசாலைத் திட்டம்

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் ஓர் அம்சமாக மாணவர்களிடையே ஆங்கில அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதே வெளிச்சவீடு பாடசாலைத், திட்டமாகும்.

இவ்வகை வெளிச்ச வீட்டு பாடசாலைத் திட்டம் ஒரு கல்வி வலயத்திற்கு ஒன்று எனற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட 102 பாடசாலை மாணவர்களது ஆங்கில அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் வெளிச்ச வீட்டுப் பாடசாலைத்திட்டம் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.கல்வி வலயத்திற்கான வெளிச்ச வீடு பாடசாலை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் அமைந்துள்ளது. யாழ்.கல்வி வலயத்திற்கான வெளிச்சவீடு பாடசாலைத் திட்டத்தின் வள ஆசிரியராக இ.ஜே.லெஸ்ல' நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடமிருந்து ஆங்கிலக் கல்விச் செயற்பாட்டுக்கு எதுவித பணமும் அறவிடப்படாமல் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் அதாவது ஆங்கிலப் பாடங்கள் மூலமாகவோ, தொலைக்காட்சி மூலமாகவோ, குழுச் செயற்பாடுகளின் மூலமாகவோ, கல்வி கற்பிப்பதன் மூலமாகவோ அல்லது கதைகள் மூலமாகவோ வள ஆசிரியர் ஆங்கிலக் கல்வியினைக் கற்பித்து மாணவர்களினுடைய ஆங்கில அறிவை மேம்படுத்த முடியும்.





இவ்வாறு மாணவர்களது விருப்பத்திற்கேற்ற வகையில் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியினை இலகுவாக கல்வி பயில்வதற்குத் தேவையான சகல உபகரணங்களையும் மற்றும் செலவுகளையும் உலகவங்கி வருடாவருடம் வழங்கி வருகின்றது.

இந்தவகையில் யாழ்.கல்வி வலயத்திற்கான வெளிச்ச வீடு பாடசாலைத் திட்டத்திற்கான வள நிலையம் இரண்டு இலட்சத்து எண்பத்துநாலாயிரத்து நூறறு எழுபத்து நாலு ரூபா பெறுமதியுடைய கற்றல், கற்பித்தலுக்குரிய சாதனங்கள் கொண்டதாக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை மாணவர்களும் தமது ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்கு இவ் வள அறையினை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

யாழ்.கல்வி வலயத்தினைப் போன்று தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான வெளிச்சவீடு பாடசாலை வளநிலையம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும், வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான வெளிச்சவீடு பாடசாலை வளநிலையம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும், தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான வளநிலையம் காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும், வலிகாம கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான வளநிலையம் இராமநாதன் கல்லூரியிலும், உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**ஞா.ஐங்கரன்**

இவ் வெளிச்சவீடு பாடசாலைத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் மட்டுமன்றி வீடு- சமூகம் - பிரதேசம் - நாடு என முழுமையான பயனைப்பெறமுடியும். □

# பேராசிரியர் நந்தியின் இறுதிக்கிரியைகள்...


































யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும், ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவருமான செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) இறுதிக் கிரியை நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இவ் அஞ்சலி நிகழ்வில் இரங்கல் உரையாற்றுபவர்களையும், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரீ.இளம்பரிதி ஆகியோர் மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா.ஐங்கரன்)

### 2007 இல் தேர்தலில்

# சாதாரண குடிமகனாகவே முஷாரப் போட்டியிடுவார்

(புதுடில்லி)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிட முடிவுசெய்தால், சாதாரண குடிமகனாகவே போட்டியிடுவார். இராணுவத் தளபதி என்ற பதவியில் இருந்துகொண்டு தேர்தல் களத்தில் குதிக்க மாட்டார் என்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் குர்ஷீத் கசூரி தெரிவித்துள்ளார்.

என்.டி.டி.விக்கு அவர் அளித்த பேட்டியில், நாட்டின் அதிபராக இருப்பவர் இராணுவ உடையில் இருக்கக் கூடாது என்று முதலில் கூறியவர் முஷாரப்தான். எனவே அவர் இராணுவ ஜெனரலாக தேர்தல் களத்துக்கு வர மாட்டார். எனினும் இப்போது இராணுவ உடையுடன் இருப்பதற்குச் சில காரணங்களை அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது.

நாட்டின் தலைவர் இராணுவ அதிகாரியாக இருப்பதில் எனக்கும் உடன்பாடு கிடையாது தான். நாங்கள் பங்கேற்ற சிறப்பு நிகழ்ச்சிகளைப் பார்த்தால் தெரியும். அதிபரும்கூட இராணுவ உடையுடன் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை விரும்புவதில்லை.

எனவே மீண்டும் அவர் தேர்தலில் போட்டியிட்டால் சாதாரண குடிமகனாகவே போட்டியிடுவார் என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஆவியாகப் போகிறது செத்த கடல்



ஜோர்டான் நாட்டில் டெட்ஸி (செத்த கடல்) என்று ஒன்று உள்ளது. இந்தக் கடல மிகுந்த உப்பு தன்மை வாய்ந்ததாகும். இதில் மூழகி யாரும் தற்கொலை செய்து கொள்ள முடியாது. இதில் மூழ்க நினைப்பவர்கள் மிதந்து கொண்டேதான் இருப்பார்கள்.

ஜோர்டான் நதியில் இருந்து இந்த கடலுக்கு வந்து கொண்டு இருந்த நீரும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் இந்த கடல் இன்னும் 50வருடத்தில் ஆவியாகிவிடும் நிலையை எட்டி இருக்கிறது.

இந்தக் கடலைப் பாதுகாப்பது குறித்து சமீபத்தில் ஆய்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் ஜோர்டான், இஸ்ரேல், பாலஸ்தீன அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

இன்னும் 3ஆண்டுகளில் இதை பாதுகாக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது என்று இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஜெர்மனியைச் சேர்ந்த சுற்றுலா பெண் பயணி ஒருவர் இந்தக் கடலில் மிதந்து கொண்டே புத்தகம் படிக்கும் காட்சியைப் படத்தில் காணலாம். (ற)

# செவ்வாயில் மணலில் சிக்கிய 'ஆபர்ச்சுனிட்டி' மீட்பு

(கலிபோர்னியா)

செவ்வாயக் கிரகத்தில் மணலில் சிக்கிக்கொண்டு, கடந்த 5 வாரங்களாக எங்கும நகரமுடியாமல் இருந்த ஆய்வு வாகனமான ஆபர்ச்சுனிட்டியை மணலில் இருந்து மீட்டுச் சாதனை புரிந்துள்ளனர் அமெரிகக விஞ்ஞானிகள்.

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' அந்த வாகனத்தை அனுப்பியது. ரூ.1800 கோடி செலவில் அந்த வாகனம் உருவாக்கப்பட்டதாகும். அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள 'ஜெட் புரெபெல்ஷன் லேபாரட்ட்ரி' என்ற நிறுவன விஞ்ஞானிகள், தரைக கட்டுப்பாட்டு அறையிலிருந்து அந்த வாகனத்தை இயக்கி வருகின்றனர்.

அந்த வாகனம் மணலில் சிக்கி மீண்டது குறித்து, கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி ஜிம் எரிக்சன் கூறியதாவது,

ஏப்ரல் 26ஆம் திகதி செவ்வாயில் 88.5 மீற்றர் தூரம் செல்வதற்கு ஆபர்ச்சுனிட்டி வாகனத்துககு இங்கிருந்து விஞ்ஞானிகள் ஆணை பிறப்பித்தனர். அது அவ்வாறு சென்றுகொண்டு இருந்தபோது, ஓர் அடி உயரமுள்ள ஒரு மணல் பகுதியைக் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதைக் கடக்குமபோது அந்த மணலில் சிக்கிக்கொண்டது ஆபர்சுனிட்டி வாகனம்.

ஆறு சக்கரங்களைக் கொண்ட அந்த வாகனத்தை அந்த மணலில் இருந்து மீட்க இங்கிருந்து விஞ்ஞானிகள் பல நட்வடிக்கைகள் தொடர்ந்து மேற்கொண்டவாறு இருந்தனர். முகப்பவுடர் போல மிருதுவாக இருந்த அந்த மணலுக்குள் அவ் வாகனத்தின் சக்கரங்கள் நடுப்பகுதி (ஹப்) வரை சிக்கிகொண்டு இருந்ததால் அவ்வளவு எளிதாக அதை மீட்க முடியவில்லை. அதை முன்னும் பின்னுமாக இயக்கி, கடைசியில் அந்த மணல மேட்டிலிருந்து அதை மீட்டனர் விஞ்ஞானிகள்.

மணிலிலிருந்து அது மீண்டு வெளியே வரும் புகைப்படங்கள் செவ்வாய கிரகத்திலிருந்து தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்குச் சனிக்கிழமை வந்தன. அதைப் பார்த்து விஞ்ஞானிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

மணலில் சிக்கிகொண்டதால், கடந்த ஒரு மாதத்தில் அது ஓர் அடி தூரத்துக்கூட நகர்ந்து செல்ல முடியவில்லை. இப்போது மீட்கப்பட்டுவிட்டதால், அதன் மூலமான ஆய்வுப் பணிகள் தொடரும் என்றார் ஜிம் எரிக்சன். (ற)

# ஆட்கடத்தலில் ஈடுபடும் 14 நாடுகளுக்கு பொருளாதார தடைவிதிக்க அமெ. முடிவு

(வோஷிங்டன்)

விபச்சாரத்துக்காக வெளிநாடுகளுக்கு பெண்களைக் கடத்தும் 14 நாடுகளுக்கு பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இந்த நவீன காலத்திலும் பல நாடுகளில் இருந்து வெளிநாடுகளுக்கு மனிதர்கள கடத்தப்படுவததை தடுக்க முடிவது இல்லை. பெரும்பாலும், விபச்சாரம் மற்றும் கொத்தடிமை வேலைகளுக்காக, பலர் நாடு விட்டு நாடுகடத்தப்பட்டு வருகிறார்கள்.

இப்படி கடத்தப்படுபவர்களை நவீன கால அடிமைகள் என்று அமெரிக்கா வர்ணித்துள்ளது. சவுதி அரேபியா, குவைத் உள்பட 14நாடுகள் இத்தகைய ஆள்கடத்தலை தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நாடுகளுக்கு பொருளாதார தடை வதிக்க அமெரிக்க முடிவு செய்து இருப்பதாக வெளியுறவுத்துறை செயலாளர் கொண்டலிசாரைஸ் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

இந்த நாடுகளின் பட்டியலில் சவுதி அரேபியா, குவைத் தவிர, கத்தார், ஐக்கிய அரபு குடியரசு போன்ற மேலும் சில வளைகுடாநாடுகளும் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகளுக்கு தண்டனை அளிப்பது இதன் நோக்கமல்ல. நவீன அடிமைத்தனத்தை ஒழிக்க அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த தடை விதிக்கப்படுகிறது.

ஆட்கடத்தல் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானையும் இணைப்பது குறித்து அமெரிக்கா பரிசீலனை செய்து வந்தது. ஆனால் அதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கை மேற்கொண்டதால அமெரிக்காவின் கண்காணிப்பில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# இலட்சம் பேர் திரண்ட மாபெரும் ஆர்ப்பாட்டம்




ஸ்பெயினில் இருந்து பிரித்து பாஸ்கு இனத்தவருக்கு தனிநாடு வேண்டும் எனறு இலட்சம் பேர் திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஸ்பெயினில் இருந்து பிரித்து பாஸ்கு இனத்தவருக்கு தனிநாடு வேண்டும் என்று கேட்டு பல வருடங்களாக அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இ.டி.ஏ. என்ற தீவிரவாத அமைப்பும் வன்முறை மூலம் இதறகு போராட்டம் நடததுகிறது.

சமீபத்தில் ஸ்பெயின தலைநகர் மாட்ரிட் நகரில் பாஸ்கு இன மக்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு தனி நாடு வழங்க வேண்டும் என்று கோரி பாடாசுனா பார்ட்டி என்ற அரசியல் கட்சி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் இலட்சக்கணக்கானவர் கள் கலந்து கொண்டனர். (ற)

# குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஜாக்சனுக்கு 18 ஆண்டுகள் சிறை

(சாந்தா மரியா)

அமெரிக்க பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமானால் அவருக்கு 18ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அளிக்கப்படும் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுவனை பாலியல் பலாத்காரம் செய்தது, சதித்திட்டம் தீட்டியது உட்பட 10 குற்றச்சாட்டுகள் குறித்து அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

13 வயது சிறுவனை நான்கு முறை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்ட சிறுவனின் சகோதரர் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் மட்டும் சாட்சியம் நிருபணமானால் அவருக்கு 3 லிருந்து 8ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும்.

சிறுவனைக் கடத்திச் சென்று வீட்டில் சிறைவைத்து துன்புறுத்தியது, அவனது குடும்பத்தாரை மிரட்டியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு என்பன குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. மது அருந்திவிட்டு சிறுவனை பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

இந்த 10 வழக்குகளிலும் குற்றங்கள் நிரூபணமானால் ஜாக்சனுக்கு 18 ஆண்டுகள் மறறும் 8 மாதங்கள்வரை சிறைத் தணடனை கிடைக்கும் என முன்னாள் அரச வழக்கறிஞர் லெவன்சன் தெரிவித்துள்ளார். (ற)

# செவ்வாய்க்கு புதிய விண்கலம்

அமெரிக்காவின் நாசா ஆராய்ச்சி நிலையம் செவ்வாயில் புதிய விண்கலத்தைத் தரையிறக்க உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் ஏற்கனவே அமெரிக்காவின் ஸ்பிரிட, ஆபர்ச்சுனிட்டி ஆகிய 2விண்கலங்கள் தரை இறங்கின. கடந்த ஆண்டு தரை இறங்கிய இவை செவ்வாய் மண்ணில் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து வருகின்றன.

இந்த நிலையில் போனிக்ஸ் என்ற புதிய விண்கலத்தை செவ்வாய் கிரகததில் தரை இறங்கச் செய்ய அமெரிக்காவின் நாசா ஆராய்ச்சி மையத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது 2007ஆம் ஆண்டு ஏவப்படும். 2008 இல் இது செவ்வாயில் தரை இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விண்கலம் செவ்வாய் மண்ணில் இடம்விட்டு இடம் நகராது ஒரே இடத்தில் இருந்தபடி ஆராய்ச்சி நடத்தும்.

இந்த ரோபோ கைமூலம் செவ்வாயில் உறைந்து காணப்படும் பனிப்பாறையைத் தோண்டி ஆராய்ச்சி மேற்கொள்ளும். செவ்வாய் வடதுருவ பகுதியில் இது தரையிறங்கி இந்த ஆராய்ச்சியைத் தொடங்கும். சுற்றுச்சூழல், மண்ணியல், உயிரினம் முன்போ இப்போதோ உள்ளதா? என்பது பற்றி இது ஆராய்ச்சிகள் நடாததும். (ற)

கொலம்பியாவில் நடந்த தக்காளித் திருவிழாவில் கொலம்பியர்கள் தக்காளியைத் தூக்கியெறிந்து மகிழும் காட்சி.



கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு - குறள்

வலம்புரி

# பயந்து பயந்து சாவதைவிட நாட்டைப் பிரிப்பது மேலல்லவா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலின் உச்சம் காரணமாகவே, இலங்கையரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டது. விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தவில்லை எனில் இலங்கையில் தமிழர் தாயகம் எங்கும் சிங்களக் குடும்பங்களே குடியிருக்கும். இது உள்ளார்ந்த ரீதியில் உணர்ந்துகொள்ளப்பட்டால் மட்டுமே உண்மையாகப்படும். இல்லையேல் வெறும் கற்பனை வாதமாகவே இருக்கும்.

எதுவாயினும், தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினையை சிங்கள ஆட்சியாளர்களுக்கு உணர்த்துவதற்காக விடுதலைப் புலிகள் பலத்த அடிகொடுக்கவேண்டிய தேவையிருந்தது. விடுதலைப் புலிகளின் படைப்பலத்திற்கு, தாக்குதல் திறத்திற்கு ஈடுகொடுக்கமுடியாத இலங்கை அரசு சமாதானம் என்ற அணுகுமுறைமூலமே விடுதலைப் புலிகளை அமைதிப்படுத்த முடியுமென நினைத்தது.

விடுதலைப் புலிகளும் சமாதானத்தின்பால் கொண்ட விருப்புக் காரணமாக இலங்கை அரசின் சமாதான அறிவிப்பை ஏற்றுக்கொண்டனர்.

உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசும் சிங்கள அரசுகளுக்கு விடுதலைப் புலிகள் நடாத்தும் தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்ற ஆர்வம் இருந்ததே தவிர, தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நினைப்பு அறவே இல்லை, இருக்கவில்லை.

அதன் காரணமாகவே விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்தபின்னரும், சமாதானப் பேச்சுக்களைத் தொடராமல் இழுத்தடிப்பு நடக்கின்றது. அதேநேரம் யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் விடுதலைப் புலிகளின் தாக்குதலை நிறுத்திவிட்டு தனது படைக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஆயுதக் கொள்வனவு, ஆயுதப் பயிற்சி என்பனவற்றிற்கு நாட்டின் பாதுகாப்பிற்கெனக் காரணம் காட்டினாலும் , நாட்டின் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் சக்திகள் எவையென்பதை அரசு தெளிவுபடுத்தத் தவறிவிட்டது.

அதேநேரம் இலங்கைக்கு வெளிநாடுகளால் அச்சுறுத்தல் ஏதேனும் இருக்கிறதா? எனில் அதுவும் இல்லை. அப்படியானால் விடுதலைப்புலிகள் மீதான அச்சமே ஆயுதக் கொள்வனவிற்கான காரணம் எனக்கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையை செய்துவிட்டு அவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்க ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது அரசின் உச்சமான கபடத்தனமாகும். இதனை உறுதிசெய்வதாக விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் வான்படை பற்றிய இலங்கை அரசின் அறிக்கைகள் அமைந்துள்ளன.

அதாவது, விடுதலைப் புலிகளிடம் விமானப் படை உண்டென்று சமாச்சாரம் ஏற்கனவே தெரிந்ததாயினும், அதனை மிகப்பெரிய ஆபத்துப் போல இலங்கையரசு காட்டிக்கொள்கிறது.

விடுதலைப் புலிகளின் தரைப்படையை வெற்றி கொண்டவர் போலவும், விமானப்படையே தமக்கு அச்சமாக இருப்பதுபோலவும் அமைச்சர் கதிர்காமர் கதையளக்கின்றார்.

ஆனால் விடுதலைப் புலிகளிடம் இருக்கக்கூடிய காவல்துறைக்கும், இலங்கையரசு அச்சம் கொண்டிருப்பதே உண்மை. இந்த உண்மைகளை மறைப்பதைவிட, அஞ்சிஅஞ்சி ஓலம் இடுவதைவிட நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடுவதே சாலச்சிறந்ததாகும்.

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு இரு வாரங்களில் அடிக்கல்

## - மத்திய கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு

சேதுகால்வாய்த் திட்டத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன சிங் இன்னும் இரு வாரங்களில் துவக்கி வைக்கவுள்ளார். தூத்துக்குடி அல்லது மதுரை அல்லது இராமேல்வரத்தில் நடக்கவுள்ள திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி உள்ளிட்டோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதுகுறித்து இந்திய மத்திய கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு தூத்துக்குடியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

சேது கால்வாய்த்திட்டத்தை பிரதமர் மனமோகன்சிங் இம மாதம் 3ஆவது வாரத்தில் துவக்கி வைக்கிறார். தூத்துக்குடி, மதுரை அல்லது இராமேஸ்வரத்தில் நடக்கவுள்ள திட்ட அடிக்கல் நாட்டுவிழாவில் காங்கிரஸ் தலைவி சோனியா, தி.மு.க.தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். பாதுகாப்பு விஷயங்களைக் கருத்தில்கொண்டு விழா நடக்கும் இடம் தேர்வு செய்யபபடும்.

சுனாமிக்குப் பின் ரூ.3 கோடியில் கடலின் மாற்றம் குறித்து ஆராயப்பட்டது. ஆனால் எவ்வித பாதிப்பும் இல்லை. திட்டத்தால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படாது. சுற்றுச் சூழலும கெடாது. சேதுகால்வாய்க் கடலில் ஏற்படும் "சுனாமி" போன்ற இயறகை சீற்றங்களின் வேகத்தைத் தடுக்கும். சேதுகால்வாய்த் திடட அலுவலகம் இராமேஸ்வரத்தில் இருக்கும்.7 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

சேதுகால்வாய்த் திட்டத்தின் மூலம் இராமேஸ்வரம், சேது பாவா சத்திரம், மல்லி, நாகப்பட்டணம், தொண்டியில் மீன்பிடித துறைமுகங்கள் அமைக்கப்படும்.

அதற்குத் தேவையான நிதி உதவி செய்ய மத்திய அரசு தயாராகவுள்ளது. இதற்கு மாநில அரசின் ஒத்துழைப்பு தேவை.

சேது சமுத்திர கார்ப்பரேஷன் லிமிடெட் சார்பில் இராமேஸ்வரம அல்லது மண்டபத்தில் ஒரு சிறிய துறைமுகம் அமைக்கப்படும். ஆண்டிற்கு 5 மில்லியன் தொன்சரக்குகள் கையாளும் துறைமுகமாக அது அமையும்.

தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடிக்கு (மொத்தம் 144 கி.மீ.) 4 வழிச்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ரூ.650 கோடியில் சாலை அமைக்கும் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் தொடங்கும்.

சேதுகால்வாய்க்காக தோண்டப்படும் மணலை நிரப்புவதன் மூலம் தனுஷ்கோடியில் கடலினுள் மூழ்கிய 2ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தை வெளிக்கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்திருந்தது. எனினும் இதில் மாநில அரசு ஆர்வம காட்டாததால் அத்திட்டம் கைவிடப்பட்டது. இவ்வாறு டி.ஆர்.பாலு கூறினார். (ற)

## முப்படை பலத்துடன் புலிகள்;

# முறியடிக்க வியூகம் வகுக்கின்றன இலங்கை-இந்திய அரசாங்கங்கள்

தமிழீழத் தாயகத்தில் அரசு நிர்வாகத்தை நடத்தி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு அரசுக்குரிய முப்படைகளையும் தன்னகத்தே கொண்டு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அரணை உருவாக்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த முப்படை பலத்தை எதிர்கொளள இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் தற்போது புதுடில்லியில் வியூகங்கள் வகுத்துக் கொண்டிருப்பதாக புதுடில்லி அரசியல அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனை இந்திய ஊடகங்களில் நாளாந்தம் வெளியாகும் செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன.

இந்தியா சென்ற இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் இடையேயான சந்திப்பில் இது தொடர்பானவையும் விவாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய ஊடகமான "இந்தியன் எக்ஸ்பிரஸ்" இது குறித்து வெளியிட்டுள்ள செய்தியில், விமானப்படை தொடர்பானவற்றில் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கை முன்வைக்கும் இராணுவம் தொடர்பான அனைத்துக் கோரிக்கைகளையும் பரிசீலிக்க புதுடில்லி தயாராக இருக்கிறது என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அடுத்தகட்ட ஆலோசனை நடத்த மூத்த இராணுவ அதிகாரிகள் கொண்ட குழுவை புதுடில்லிக்கு விரைவில் இலங்கை அரசு அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் கிடப்பில் கிடக்கும் இந்திய-இலங்கை இராணுவ ஒப்பந்தத்தை கையெழுத்தாக்கும் முயற்சியிலும் இலங்கை அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இலங்கை மீதான இந்திய கரிசனை அதிகரிப்பதற்குக் காரணம் என்ன? என்று வினா எழுப்பியபோது, புதுடில்லி அவதானிகள் சிலர் கருத்துத்தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளான வைகோவின் மறுமலாச்சி திராவிட முன்னேற்றக்கழகம், ராமதாசின் பாட்டாளி மக்கள் கடசி மற்றும் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை இந்தியக் கூட்டணி அரசில் பங்கேற்று இருக்கின்றன.

இவை இலங்கை இனப்பிரச்சினையில் தமிழீழ விடுதலைப்புலிகள் பக்கமே இவை சார்ந்துநிற்கின்றன. இந்திய-இலங்கை இராணுவ ஒப்பந்தத்திற்கு வைகோ வெளிப்படையாக இந்தியப் பிரதமரிடமே நேரிடையாகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தும் இருக்கிறார்.

இதனால் இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்த இந்தியக் கூடடணி அரசு தயக்கம் காடடி வருகிறது. அத்துடன், இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வலுப்படுத்தும நோக்கில் இலங்கையில் சீனா வலுவாக நிறபதை இந்திய அரசு விரும்பவிலலை என்பதை சேது சமுத்திரம் தொடர்பான இலங்கையின் அதிருப்திக்குப் பதிலளிக்கும்போது இந்திய அரசு கொள்கை வகுப்பாளாகள் இலங்கையிடம் வெளிப்படையாகவே விமர்ச்சித்துள்ளனர் என்றனர்.

இலங்கைக்கும், சீனா, பாகிஸ்தானிற்கும் இடையேயான நெருக்கமான உறவினால் இலங்கை மீது அதிருப்தி கொணடிருககும் இந்திய அரசியல் தலைவர்களின் மனநிலையை மாற்றும் வகையில் அதாவது இந்த அதிருப்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீது திருப்பிவிடும் வகையில் இந்திய உளவுத்துறையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் புதுடில்லி அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இநத உளவுத்துறை மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படை குறித்த மிகைப்படுத்தல் பிரச்சாரம், தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவைக் கொல்ல சதி என்ற பரப்புரைகள் அண்மையில் மிக வேகமாக கட்டவிழ்த்துவிடப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவை நெருக்கப்படுத்தவும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் குழு தீவிரம் காட்டுவதாகவும அவர்கள் தெரிவித்தனர்.

இதனால்தான் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விமானப் படையும் இருப்பதாக வெளியான தகவலால் அதிர்ச்சியடைந்திருக்கும் இலங்கைக்கு ஆறுதல் அளிக்கும் வகையில கடற்படை நடவடிக்கைகளை விட விமானப்படை ஒத்துழைப்பையே தற்போது புதுடில்லி முதன்மைப்படுத்தி வருவதாகவும், இலங்கைக்கு உதவி அளிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களுடன கூடிய ராடர் சாதனங்களை இந்தியா அளிக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

தற்போது இலங்கையிடம் உள்ள ராடர் வசதிகள் அனைத்தும் விமானப் போக்குவரத்திற்குரியதாகவும் சிறுரக விமானங்களை இயக்குவதற்கான குறைந்த தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாகவுமே இருக்கின்றது.

இந்நிலையில் தமிழ்நாட்டின் இராமேஸ்வர கடலோரத்தில் உச்சிப்புளி என்ற இடத்தில் இந்தியக் கடற்படையினருக்கான நவீன விமானத் தளம் ஒன்று பெருந்தொகை செலவிடப்பட்டுக் கட்டப்பட்டு வருகின்றது.

2ஆம் உலகப் போரில் பாவனைக்கு இருந்த உச்சிப்புளி கடற்படை விமானத் தளம் 1987ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டு நிறுவப்பட்டது. விமானத் தளத்தின் ஓடுபாதையை 1,100 மீற்றரில் இருந்து 2000-2500 மீற்றராக விரிவாக்கும் திட்டம் ஒன்றையும் இந்தியக் கடற்படை மேற்கொண்டு வருகிறது. தற்போதைய ஓடுதளத்தின் தெற்குப் பகுதியில்தான் இந்த விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த உச்சிப்புளி விமானத்தள விரிவாக்கத்திற்காக 10 ஆயிரத்துக்கும் அதிகமான பனை, தென்னை மரங்கள் தறிக்கபபட்டு வருவது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு நேற்றுக் கடிதம் ஒன்றை தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா அனுப்பியுள்ளார்.

"உச்சிப்புளி கடற்படை விமானத் தளம் மிகவும் முக்கியத்துவம் வாயந்தது. தமிழகக் கடற்கரைப் பகுதிக்கும் இலங்கை கடற்பகுதிக்கும் இடையே உள்ள பகுதியில் இந்தத் தளம் தீவிர கண்காணிப்பு நடத்தி வருகிறது. விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது தொடர்பாகவும் இந்தத் தளம் முக்கியத்துவம் பெறுகிறது.

விடுதலைப புலிகளின் விமானப்படைப் பிரிவின் பலம் அதிகரித்து இருப்பது பற்றியும் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகவும உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் உள்துறை அமைச்சருக்கு நான் ஏற்கனவே கடிதம எழுதியிருக்கிறேன். எனவே உச்சிப்புளி விமானத்தளத்தின் தரம் உயர்த்தபபட வேண்டும்" என்று அதில் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (ற-4)



## திைசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பிரபஞசத்தின் மூலம் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் தோற்றத்தை இயற்கை என்கிறோம். சிறப்பு நிலையில் வெளிப்படுத்திக்கொள்வதை அவதாரங்கள் என்கிறோம். தீவீரமான பக்தியும், மேலான ஞானமும் ஒன்றே.

சுவாமி விவேகானந்தர்

## திருமலையில் விமானத்...

என்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு நடவடிக்கையே இதுவாக இருக்கும் என்று நினைக்கின்றோம் என்றார்.

நாங்கள் இந்த விடயம் சம்பந்தமாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தெரியப்படுத்தியுள்ளோம். அப்படியொரு விமானத்தளம் அப்பகுதியில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அதை கண்காணிப்புக்குழு பார்ப்பதற்கு தாங்கள் ஏற்பாடுசெய்வதாக எழிலன் கூறினார். (ச-9)


# கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர்

செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)

முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும், யாழ் .பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியரும் சிறந்த படைப்பாளியுமாகிய அமரர் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்க்ளின் மறைவு இலக்கிய உலகிற்கு ஓர் பேரிழப்பாகும்.

இவரின் பிரிவாற் துயருற்றிருக்கும் கலையுலகத்தவருக்கும், அமரரின் குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாசார கூட்டுறவுப்பெருமன்றம்,
கட்டைவேலி-நெல்லியடி
கரவெட்டி. (C-1429) ப.நோ.கூ.சங்கம்.


## பொதுக்கட்டமைப்பு...

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 11 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது பொதுக் கட்டமைப்புத தொடர்பாக அரசின் நிலைப்பாடு மற்றும் விடுதலைப் புலிகளின் முடிபு, போராளிகளுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதில் சிக்கல்நிலை என்பது குறித்து பேசபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பினை அடுத்து நண்பகல் 12 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடொன்று நடைபெறவுள்ளது. இம்மாநாட்டின்போது எரிக் சொல்ஹெய்முடன் பேசப்பட்ட விடயங்கள், விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடுகள் என்பன குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களுக்கு விளக்குவாரெனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## பேராசிரியர்..

மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர்ஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது: அங்கு கொழும்புசென்று திரும்பிய பேராசிரியர் சண்முகதாஸ், தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். பின்னர் நந்தியின் சிதைக்கு அவரது மூத்த மருமகன் தபோதரன் தீமூட்டினார். (ச-19)

## பொதுக்கட்ட...

தலதாமாளிகைக்கு முன்பதாக இவர்கள் நடத்தினர்.

இதேவேளை எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் பொதுக்கட்டமைப்பினை ஆட்சேபித்து சாகும் வரையிலான போராட்டத்தினை ஆரம்பிக்கப் போவதாக தேசிய பிக்குகள் முன்னணி எச்சரித்துள்ளது. (ச-4)

## ஜனாதிபதி...

ஆனால் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசிய ஜனாதிபதி செயலகப்பேச்சாளர் நேற்று நடைபெறவிருந்த பேச்சுக்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளதெனவும், இச்சந்திப்பு இன்று காலை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## கொழும்பில்...

யில் திரிபவர்கள் பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். முக்கிய தரப்பினர் பயணம்செய்யும் வீதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களினையடுத்து கொழும்பில் உள்ள தமிழ்மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. (ச)


திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு

- ☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- ☆ விசேட வைபவங்கள்
- ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான கட்டணத்தில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467

மனோகரா யாழ்




கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயரா... ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
3 வது வெற்றிவாரம்
அறிந்தும் அறியாமலும்



கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை

விஜய், தேவயானி, ரம்பா நடித்த
நினைத்தேன் வந்தாய்



கா.நே: 11.00, 2.45
6.00 (பு.நே)



# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்



விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் 08.06.2005 புதன்கிழமை காலை 5.00 மணி முதல் விஷேட அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபத்திலிருந்து பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், சண் டேஸ்வரர் சகிதம் எழுந்தருளி காலை 10.00 மணிக்கு தேர் வீதி உலா நடைபெறும்.

விசேஷ தவில் நாதஸ்வர கச்சேரிகளாக,

1. சோ.சிவகரன் குழுவினர் — இணுவில் (கோயில் வித்துவான்)
2. K.R.சுந்தரமூர்த்தி குழுவினர் — இணுவில்
3. K.கானமூர்த்தி குழுவினர் — கோண்டாவில்
4. K.பஞ்சமூர்த்தி குழுவினர் — கோண்டாவில்
5. N.R.S.இரவீந்திரன் குழுவினர் — இணுவில்
6. N.R.கோவிந்தசாமி புதல்வர்கள் — இணுவில்
7. பாலமுருகன் குழுவினர் — காரைநகர்



விசேஷ தவில், நாதஸ்வரம்

1. K.R.புண்ணியமூர்த்தி இணுவில்
2. N.R.S.சுதாகரன் இணுவில்
3. M.P.பாலகிருஷ்ணன் அளவெட்டி
4. P.நாகேந்திரன் சாவகச்சேரி

குறிப்பு:- *சக்தி FM காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை நேரடி அஞ்சல் நடைபெறும்.
*நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

ஊடக அனுசரணை.

தேர்திருவிழா உபயகாரர்.



ஐங்கரன் இன்ரனஷனல்

AYNGARAN INTERNATIONAL

UNIT 19, RIVERSIDE BUSINESS PARK,
WIMBLEDON, LONDON SW 19 2RL.UK



Web : www.ayngaran.com Tel : +44(0)208 543 4477 Fax : +44(0) 208 543 4466

Ayngaran : Speclalist in home Entertaiment

விளம்பர அமைப்பு இணுவை செந்தமிழன்


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.